JL
m211, N30BV
N31·2·12,
188789

Regd. No. M. 2573.



# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி.பி.யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி.பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்,

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
188789
8 - JAN 1939

# பாலவித்யா.

(மாதப் பத்திரிகை.)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

| தொகுதி II | 1931ஆ டிஸம்பர்மீ<br>பிரஜோத்பத்திஆ மார்கழிமீ | பகுதி XII |
| --- | --- | --- |

## விகட விநோதங்கள்.

(கொடிக்கூர் V. K. ராதாகிருஷ்ண சர்மா.)

---

**ஸ்கூல் இன்ஸ்பெக்டர் :**—நாராயணா! நீ மனக்கணக்கு கற்றுக்கொண்டிருக்கிறாயா?

**நாராயணன் :**—தாங்கள் சொன்னதுபோல் கற்றுக்கொண்டிருக்கிறேன்.

**இன்ஸ்பெக்டர் :**—சரி; இதைச் சொல் பார்க்கலாம்: 2 அணாவிற்கு ரவையும், 3 அணாவிற்கு நெய்யும், 1 அணாவிற்கு சர்க்கரையும், காலணாவிற்கு ஏலக்காயும் வாங்கினால் மொத்தம் என்னவாகும்?

**நாராயணன் :**—சார்! நல்ல ஆர்யபவன் லட்டாகும்.

*   *   *   *

**வித்வான் :**—தங்களுக்கு சங்கீதத்தில் பிரியம் போலும். தங்களுக்கு என்னென்ன ராகங்கள், தாளங்கள் தெரியும்?

**பிரபு:**—எனக்கு ராகத்தில் புஷ்பராகமும், தாளத்தில் பேதாளமும் தெரியும்.

*   *   *   *

சேஷி:—எதற்காக் ஆற்றங்கரையில் தனிமையில் உட்கார்ந்துகொண்டு வீண்காலம் போக்குகிறாய்.

நுபசவுந்தரி:—நான் வீண்காலம் போக்கவில்லை. நானும் என் கணவனும் ஜலக்ரீடை செய்துகொண்டு இருக்கும்போது என் கணவனைக் காணோம். அதே கவலையாய் இருக்கிறது. வருகையை எதிர்பார்க்கிறேன்.

சேஷி :—உன் கணவன் காணாமற்போய் எவ்வளவு நேரமாகிறது?

நுபசவுந்தரி :—மூன்று நாளைக்குமேல் ஆகிறது.

# அனுபவாலக் குறிப்புகள் (தொடர்ச்சி.)

[கடலூர், வே. இராமச்சந்திரன்.]

———0———

அநேகமாக மனிதர்களுக்குண்டாகும் எல்லா நோய்கட்கும் மருந்துகளுள. ஆயினும் இதற்குப் புறம்பான மனோவியாதிக்கு ஔஷதமொன்றுமில்லை அதைத் தீர்க்க அதற்குக் காரணமான ஒன்றை அடைதலேயாகும் இதைப் பிறருக்கு கூற வெட்கி, வைத்தியத்துக்கு ஏராளமாகச் செலவிட்டு, பயனின்றி பரிதபிப்போர் அநேகர்.

*   *   *   *

பத்திரிகை படிப்பும் புஸ்தக ருசியும் ஒருவருக்குத் தோன்றிவிட்டால், அறிவை விருத்திசெய்துகொள்ள அதைவிட வேறு வழி வேண்டியதில்லை. இவற்றால் அடையும் இன்பத்திற்கு இணையில்லை.

*   *   *   *

சிலருக்கு சுவதாவாகவும் அறிவிருப்பதில்லை. பிறர் எடுத்துக் கூறினும் கேட்பதில்லை. வெகு சண்டித்தனமாக 'தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று விதண்டாவாதம் செய்வர். இதிலே எல்லாம் தெரிந்தது போன்ற நடிப்பு வேறே!

*   *   *   *



"செய்வதென்ன? நம் இருவருக்கும் கடனுக்குக் குறைவில்லை. இவைகளை விற்று நம்முடைய கடன்களைத் தீர்த்துவிடுவோம். இவைகள் குறைந்தது 75000 ரூ. பெறுமென்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் நாம் அவசரப்படக்கூடாது. இன்னும், இவைகள் என் வீட்டிலிருப்பது பிசகு. இவைகளை கொஞ்சகாலம் நீர் ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டிரும். பிறகு விற்பதற்குவேண்டிய ஏற்பாடுகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். எங்கே முதலில் இவைகளை எடுத்து வையும். கொஞ்சநேரம் தூங்குவோம்." என்றான். ஆனால் ராமு,

"என்னால் தூங்கமுடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஆமாம்; போலீஸார் அக் கிழவியைக் (மரகதத்தை) கண்டுபிடித்துவிட்டால், அவள், நீ வந்ததையும், இந்நகைகளைப் பிடுங்கிக்கொண்டதையும், சொல்லிவிடமாட்டாளோ?" என்று வினவினான். பக்கிரிசாமி,

"ஒருக்கால் போலீஸார் அவளைப் பிடிக்கலாம். ஆனால் அவள் தன் வாயைத் திறந்து பேசமாட்டாள்." என்று உறுதியுடன் கூறினான்.

*   *   *   *

மறுநாட் காலை சுமார் 6 மணி இருக்கும்.

அச்சமயம் சிங்காரம் செட்டியாருடைய வீட்டின் கொல்லைப்பக்கத்திலிருந்த ஒரு மைதானத்தின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்த குடியானவன் ஒருவன், சமீபத்தில் சவம் ஒன்று கிடப்பதைக் காணவே, திடுக்கிட்டவனாய், துரிதமாய்ச் சென்று அதைக் கவனித்துப் பார்த்துவிட்டு, அவ்வூர் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடினான். அவ்விதம் அங்கு கிடந்தது சிங்காரம் செட்டியாருடைய வீட்டு வேலைக்காரக் கிழவி மரகதமேயொழிய வேறல்ல.

பிறகு நடந்த போலீஸ் விசாரணையை நாம் விவரித்து எழுதவேண்டியது அனாவசியம். மைதானத்தில் அக் கிழவி கொலைசெய்யப்பட்டிருந்ததையும், செட்டியாரின் வீட்டுக் கொல்லைக் கதவு திறந்துகிடந்ததையும், அவ் வீட்டு மாடி

யில் ராஜலெக்ஷ்மி கொலைசெய்யப்பட்டுக்கிடந்ததையும், அவளுடைய நகைகள் களவுபோயிருந்ததையும், எல்லாம் போக, அதற்கு முந்திய தினம் மாலை, அக் கிழவி, பயங்கரத் தோற்றமுள்ள ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்ததைத் தான் கண்டதாகவும், அதில் 'சாவி' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டதாகவும், செட்டியாருடைய வேலைக்காரன் முனியாண்டி சொன்னதையும் அறியவே, போலீஸார், அக் கிழவி, பயங்கரத் தோற்றமுள்ள அம் மற்றொருவனைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, அந் நகைகளைக் களவாடத் தீர்மானித்தாளென்றும், தன் எஜமானி ராஜலெக்ஷ்மி மயங்கி நன்றாய்த் தூங்கும்பொருட்டு மரகதம் அம் மயக்க மருந்தை உபயோகித்தாளென்றும், அவ்விதம் ராஜலெக்ஷ்மி மயங்கித் தூங்க அம் மருந்தில் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதை அறியாமல் அளவுக்கு மிஞ்சி கொடுக்கவே, அதன் பலனாய் ராஜலெக்ஷ்மி இறந்துவிட்டாளென்றும், அக் கிழவி அந் நகைகளைத் திருடிக்கொண்டு கொல்லைப்பக்கமாய் ஓடி, பயங்கரத் தோற்றமுள்ள அம் மற்றொருவனை அம் மைதானத்தில் சந்தித்திருக்கவேண்டுமென்றும், பிறகு அவ்விருவர்களுள் சச்சரவு ஏற்பட்டு, அதில் அம் மற்றொருவன் அக் கிழவியைக் கொலை செய்துவிட்டு, அந் நகைகளுடன் ஓடியிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். பக்கிரிசாமியாவது ராமுவாவது அதில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடுமென்ற சந்தேகம் அவர்களுடைய மனதில் தோன்றவே இல்லை.

இவ்விதம் தப்பித்துக்கொண்டதை அறிந்த பக்கிரிசாமி, தான் அந் நகைகளை விற்கும்பக்ஷத்தில் தனக்குக் குறைந்தது 25000 ரூபாயாவது கிடைக்குமென்று சந்தோஷித்தவனாய், 12 மணி சாவகாசத்திற்குள் தான் செய்த எல்லாவற்றையும் அடியுடன் மறந்து, வியக்கத்தக்க அமைதியுடனும் குதூகலத்துடனும் காணப்பட்டான்.

ஆனால் அவனுடைய தோழன் ராமுவின் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. அவ் வாலிபனிடம் பல கெட்ட வழக்கங்கள் இருந்தபோதிலும், கொலை களவு இத்தகைய



காரியங்களைப் புஸ்தகங்களில் வாசிக்கும்பொழுதே அவன் திகிலுற்று நடுங்கும் சுபாவமுள்ளவனாகையால், தான் அவ்விதம் வாஸ்தவத்தில் ஒரு கொலையில் சம்பந்தப்பட்டுவிட்டதை அறிந்ததும், வர வர அதிகரித்த அவனுடைய பீதியையும் கவலையையும் வர்ணிப்பது முடியாத காரியம். இன்னும், அக் கிழவி மரகதமும் கொலைசெய்யப்பட்டாளென்ற செய்தியை அறிந்ததும், அவளையும் கொன்றது பக்கிரிசாமியே என்று அவன் தீர்மானித்துவிட்டானாகையால், அவனுடைய குழப்பமும் பயமும் அதிகரித்தன. தன்னைக் கண்டு மோஹித்து, தன்னை அடியுடன் நம்பி, தன்பொருட்டு கற்பையும் இழந்த ஒரு பெண்ணைக் கொலைசெய்ய தான் உட்கையாயிருந்ததை நினைத்ததும் அவனுக்கு தன் ஹிருதயம் அப்படியே வெடித்துவிடும்போலிருந்தது. அதுவுமன்றி, ஒவ்வொரு நிமிஷமும் கொலைசெய்யப்பட்ட ராஜலெக்ஷ்மி, அவன் எதிரில் தோன்றி, "ஹே சண்டாளா! என்ன காரியம் செய்தாய்?" என்று நிந்தித்ததுபோலிருக்கவே, அவ் வாலிபன், "சரி; நான் சாகும்வரையில் இவள் என்னை விடமாட்டாள். ஆகவே நரக வேதனைகளுக்கும் கேடுகெட்ட இக் கவலையையும் பீதியையும் சதா அனுபவித்துக்கொண்டிருப்பதைக்காட்டிலும் நான் தற்கொலை செய்துகொள்வது நலம்." என்று தீர்மானித்தான். ஆனால் அந்தோ! தற்கொலை செய்துகொள்ளுவது லேசான காரியமோ? அவன் அவ்விதம் தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்தபொழுது, மாலை சுமார் $5\frac{1}{2}$ மணி இருக்கும். அவன் "சரி; சாகுமுன் நான் செய்த எல்லாவற்றையும் ஒரு கடிதத்திலாவது ஒப்புக்கொள்ளாவிட்டால் அதைப்போன்ற பாபம் வேறில்லை. ஒருக்கால் போலீஸார் சுத்த நிரபராதியாகிய ஒருவனைப் பிடித்து ஹிம்ஸிக்கக்கூடும்." என்று சிந்தித்தவனாய், ஆதியிலிருந்து நடந்த எல்லாவற்றையும், இன்னும், அக் கிழவி மரகதத்தையும் பக்கிரிசாமியே கொலைசெய்திருக்கவேண்டுமென்று தான் நினைப்பதாகவும், தன் தந்தைக்கு எழுதுவதுபோல் விபரமாய் ஒரு கடிதம் எழுதி, அதை ஒரு அலமாரியிலிருந்த ராஜலெக்ஷ்மியின் நகை முடிச்சின் கீழ் வைத்தான். பிறகு அந்த அலமாரியை மறுபடியும் பூட்ட மறந்தவனாய்

ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, சுமார் அரைமணி நேரம் சிறு குழந்தையைப்போல் விசித்து விசித்து அழுதான். நடுவில் பலதரம் "ஐயோ அப்பா! ஐயோ அம்மா! ஐயோ தியாகு! (தியாகராஜன்)" என்று தன் பெற்றோர்களையும் தம்பியையும் நினைத்துக்கொண்டு, தீயில் விழுந்த புழுவைப்போல் துடித்தான். கஷ்டம்! கஷ்டம்! அச்சமயமிருந்த அவ் வாலிபனுடைய நிலைமையை மேலும் வர்ணிப்பதே பாபம். கடைசியில், "சரி; நான் அழுவதில் பிரயோஜனமில்லை. இருக்கட்டும்; முதலில் டாக்டர் குப்புஸ்வாமி அய்யருடைய வீட்டிற்குச் சென்று, விஷம் ஏதேனும் கிடைக்குமாவென்று பார்க்கலாம்." என்று தீர்மானித்தவனாய் எழுந்து அவசரத்துடன் உடுத்திக்கொண்டு வெளியே சென்றான்.

வக்கீல் அணந்தராமய்யருக்கும் அச்சமயம் அவ்வூரிலிருந்த டாக்டர் குப்புஸ்வாமி அய்யருக்கும் கொஞ்சம் பந்துத்வம் உண்டென்பது நம நேயர்கள் அறிந்த விஷயம். ஆகவே, ராமு அடிக்கடி குப்புஸ்வாமி அய்யருடைய வீட்டிற்குப் போவதுண்டு. அன்று அவ் வாலிபன் அவருடைய வீட்டிற்குப் போனபொழுது குப்புஸ்வாமி அய்யர் வீட்டிலில்லாததால் அவ் வாலிபன், கொஞ்சநேரம் அவருடைய சம்ஸாரம் கமலாம்பாளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, பிறகு, நம்பத்தக்கவிதம்,

"அம்மாமி! எனக்கு தலைவலி தாங்கமுடியவில்லை. அதற்கு ஏதேனும் கொஞ்சம் மருந்து வேண்டும்." என்றான். அச்சமயம் அவனுடைய முகம் வாஸ்தவத்தில் வெளுத்து வாடியிருந்ததால், கமலாம்பாள், அவன் சொல்வது உண்மையென்று நம்பி,

"அதோ ஆணியில் ஆஸ்பத்திரியின் சாவி இருக்கிறது பார். அதை எடுத்துக்கொண்டுபோய் வேண்டிய மருந்தை எடுத்துக்கொள். தலைவலிக்கு என்ன மருந்தென்பது உனக்குத் தெரிந்திருக்குமே. ஆமாம் ராமு! இவ்விதம் நான் ஆஸ்பத்திரியின் சாவியை உன்னிடம் கொடுத்தேனென்பதை அவர் அறிந்தால் என்னை இவ்வீட்டைவிட்டு அடித்துத்



துரத்திவிடுவார். சீக்கிரம்—" என்று பேசிக்கொண்டிருந்தவள் திடுக்கிட்டவளாய் தன் பேச்சை நிறுத்திவிட்டாள். ஏனெனில் அச்சமயம் வெளியில் போயிருந்த டாக்டர் குப்புஸ்வாமி அய்யர் வந்துசேர்ந்தார். அவரைக் கண்டதும் ராமு, "அடாடா! சமயத்தில் இவர் வந்துவிட்டாரே. சரி; இன்று நான் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து விஷம் திருட முடியாது." என்று விசனமுற்று, மேலும் அவ் வீட்டில் தாமதிக்க இஷ்டமில்லாமல், பேருக்கு கொஞ்சநேரம் குப்புஸ்வாமி அய்யருடன் பேசிவிட்டு, அவரைக் கேட்டு தலைவலிக்கு மருந்தை வாங்கிக்கொண்டு, போய்விட்டான். ஆனால் உடனே தன் வீட்டிற்கும் போக இஷ்டமில்லாமல், வேறு எங்கு போகலாமென்று சிந்தித்தவண்ணம், வீதியில் தயங்கியவாறு அவன் நின்றுகொண்டிருக்கையில், அச்சமயம் எதிர் திசையிலிருந்து வந்துகொண்டிருந்த் பக்கிரிசாமி, அவனைக் கண்டதும் குதூகலத்துடன்,

"என்ன ஐயரே! ஏன் இங்கு நின்றுகொண்டிருக்கிறீர்? வாருமே! கொஞ்சநேரம் அதோ அந்த மைதானத்தில் உட்கார்ந்துகொண்டிருப்போம்." என்று அழைக்கவே, ராமு, தன் வாயைத் திறக்காமல், அவனைப் பின்பற்றிச் சென்றான். அவ் வாலிபன் முதலில் தான் சீக்கிரம் தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்திருந்ததை பக்கிரிசாமியிடம் சொல்லலாமென்று நினைத்தான். ஆனால் மறுநிமிஷம், "சீச்சீ! இதை நாம் இப்பொழுது இவனிடம் சொல்வது பிசகு. பரம சண்டாளனாகிய இவன் இவ்விதம் என்னை ஏமாற்றி இக் கொலையில் சம்பந்தப்படுத்தியதற்கு இவனைத் தண்டனைக்குள்ளாக்காமல் விடுவது சரியல்ல." என்று தன்னுள் வாதித்துக்கொண்டு, தன் வாயைமூடிக்கொண்டிருந்துவிட்டான். பிறகு இருவரும் சென்று அம் மைதானத்தில் உட்கார்ந்துகொண்டதும், பக்கிரிசாமி, ஒருதரம் நாலாபக்கங்களையும் கவனித்துவிட்டு, தாழ்ந்த குரலில்,

"ஐயரே! போலீஸார் நம்மை சந்தேகிக்கவேமாட்டார்களென்று நான் சொன்னேனே—" என்று அவன் மேலே பேசுமுன், ராமு,

“அதிருக்கட்டும்; அக் கிழவியையும் கொன்றது நீ தானே?” என்று வினவ, பக்கிரிசாமி,

“ஆமாம்; அவளைக் கொல்லாவிட்டால் நாம் இப்படி தப்பித்துக்கொள்ள முடியுமோ?” என்றான். உடனே ராமு, வெறுப்புடன்,

“பக்கிரிசாமி! நீ இவ்விதம் போலீஸாரைத்தான் ஏமாற்ற முடியும். எங்கும் இருக்கும் தெய்வத்தையும் உன்னால் ஏமாற்ற முடியுமோ?” என்று வினவ, பக்கிரிசாமி, திமிருடன்,

“ஐயரே! உம்முடைய தெய்வத்தைத் தூக்கி சாக்கடையில் போடும். அது இருப்பது வாஸ்தவமாயிருந்தால், நான் தெரியாமல் அம் மருந்தை அவ்வளவு அதிகமாய்க் கொடுத்தபொழுது அது என்னை ஏன் தடுக்கவில்லை? அது வாஸ்தவத்தில் இருந்து, நான் அப்படிச் செய்தபொழுது சும்மாயிருந்திருந்தால், இக் கொலைக்காக அதைத்தான் தண்டிக்கவேண்டும்.” என்று கூறிவிட்டு சிறிக்கவே, ராமு, “தூ சண்டாளா! நீ இவ்வளவு அயோக்கியனென்பது எனக்கு இதுவரையில் தெரியாமற்போய்விட்டதே.” என்று தன்னுள் சொல்லிக்கொண்டு, வாயைவிட்டு,

“சரி; நேரமாய்விட்டது. நான் போகிறேன்.” என்று கூறியவண்ணம் எழுந்து நின்றான். உடனே பக்கிரிசாமி,

“சரி; போம். ஆமாம்; ஐயரே! அந்த நகைகளை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ளும்.” என்றான். ஆனால் ராமு அதைக் கவனிக்காமல் போய்விட்டான்.

ராமு தன் வீட்டிற்குள் மறுபடியும் நுழைந்தபொழுது இரவு சுமார் $8\frac{1}{2}$ மணி இருக்கும். உள்ளே நுழைந்ததும் அவ் வாலிபன் “ஹே தெய்வமே! இன்று இரவை நான் எப்படிக் கழிப்பேன்?” என்று கவலையுடன் மாடிக்குச் சென்று தன் அறைக்குள் நுழைந்ததும், திடுக்கிட்டவனாய் மேலே நடக்கச் சக்தியற்று, அப்படியே மாடிப் படியின் ஓரத்தில் சிலைபோல் நின்றான். ஏனென்றால் அச்சமயம் அவ்வறையில் தன் கையில் ஒரு கடிதத்துடன், ஒரு சாய்வு நாற்காலியில், அவனுடைய தந்தை அனந்தராமய்யர் உட்



கார்ந்துகொண்டிருந்தார். அவருடைய கையிலிருந்த அக் கடிதம் அன்று மாலை ராமு தான் ஆதியிலிருந்து செய்த எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு எழுதிய கடிதமேயொழிய வேறல்ல. அதுவுமன்றி அவர் பக்கத்திலிருந்த ஒரு மேஜையின்மேல் ராஜலெக்ஷ்மியின் நகைகள் எல்லாம் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. இதைக் கண்டதும் அவ் வாலிபன் அனுபவித்த பீதியையும் குழப்பத்தையும் நாம் வர்ணிக்கவும் வேண்டுமோ?

நிற்க, அனந்தராமய்யர் அவ்விதம் திடீரென்று அங்குவந்த காரணமென்னவென்று இப்பொழுது கவனிப்போம். அவர், தன் புதல்வனை குற்றாலம் அனுப்பியதும், இனி அவ் வாலிபன் திருந்தி நல்மார்க்கத்திற்கு வந்துவிடுவானென்று நினைத்து கொஞ்சம் சந்தோஷித்தார். ஆனால் கடைசியில் எப்படியோ ராமு ஏற்கனவே பலரிடமிருந்து 4000 ரு. கடன்வாங்கிவிட்டானென்பது அவருடைய செவிகளுக்கு எட்டவே, அவர், தன் பிள்ளையை நேரில் பார்த்து அவன் யார்யாரிடமிருந்து எதற்காக அவ்வளவு பெருந்தொகை கடன் வாங்கினான் என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு, அன்று மாலை குற்றாலம் வந்துசேர்ந்தார். அவ்வூர் ரயில்வே ஸ்டேஷனைவிட்டு வெளியில் வந்ததுமே, முதல் நாள் இரவு அவ்வூரில் இரு கொலைகள் நடந்த விஷயத்தை கேள்விப்படவே, அவருக்குண்டான ஆச்சர்யத்திற்கு அளவில்லை. கடைசில் சுமார் 8 மணிக்கு, அவர் முருக விலாஸ் வந்துசேர்ந்ததும், தன் புதல்வன் ராமுவைப்பற்றி சமையற்காரி அயிலாண்டம்மாளை விசாரிக்கவே, அக் கிழவி, அவ் வாலிபன் தினந்தோறும் அவ் வீட்டு மாடியில் பக்கிரிசாமியுடன் ரங்காடுகிறானென்று சொன்னதுமன்றி, அன்று முழுமையும் ராமு அழுதுகொண்டிருந்ததாகவும், அன்று மாலை அவன் ஒரு பெரிய கடிதம் எழுதி அதை மாடியில் ஒரு அலமாரியில் வைத்ததை தான் தற்செயலாய்ப் பார்த்ததாகவும் கூறினாள். இதைக் கேட்டதும் அனந்தராமய்யர், ஒன்றும் புரியாமல் திகைப்புற்று, உடனே மாடிக்கு ஓடிச் சென்று திறந்துகிடந்த அந்த அலமாரியிலிருந்து அக் கடிதத்தை எடுத்து, கால்மணிநேரத்திற்குள் அதை வாசித்து

விட்டார். அதை வாசித்து முடித்ததும் கொஞ்சநேரம் பிரமித்து நின்றார். பிறகு அவருடைய முகம் பயங்கரமாய் மாறியது. உடனே ரௌத்திராகாரத்துடன் மேலும் கீழும் உலாவினார். பிறகு மறுபடியும் அந்த அலமாரியை நோக்கிச் சென்று அதிலிருந்த நகை முடிச்சை எடுத்து, அதை அவிழ்த்து, அந் நகைகளை ஒவ்வொன்றாய் எடுத்து, அம் மேஜையின்மீது வைத்தார். அவைகளைப் பார்த்ததும், "அட பாபி! என்ன கார்யம் செய்துவிட்டாய்?" என்று ஒருதரம் தன் பற்களை நெறநெறவென்று கடித்தார். ஆனால் அந்தோ! மறுவினாடி தன் புதல்வன் செய்த கார்யம் வெளியாய்விட்டால் தன் வம்சத்தின் பெயர் என்னவாகுமென்று நினைத்ததும், கால்கள் சோர்வுற்று, நிற்கவும் முடியாமல், "ஹே பரமேசுவரா!" என்று அலறிய வண்ணம் தன் கரங்களால் தலையில் அறைந்துகொண்டு, தொப்பென்று ஒரு சாய்வு நாற்காலியில் விழுந்தார். பிறகு மறுபடியும் அக் கடிதத்தை ஒருதரம் வாசித்துவிட்டு மேலே என்ன செய்வதென்று புரியாமலும், ஒருக்கால் ஏற்கனவே தன் புதல்வன் தற்கொலை செய்துகொண்டிருப்பானோ வென்று பயந்தும், அவர் உட்கார்ந்துகொண்டிருக்கையில், ராமு, நாம் சொன்னதுபோல், மாடிக்கு வந்து, அவரைப் பார்த்ததும் ஸ்தம்பித்து நின்றான்.

தன் புதல்வனைப் பார்த்ததும் மறுபடியும் அனந்தராமய்யருடைய முகம் சிவந்தது. கோபத்தின் மிகுதியால் உடனே வாயைத் திறந்து பேசச் சக்தியற்றவராய், கண்களிலிருந்து அக்கினி ஜ்வாலை வீச, ஒருதரம் அவனை உற்றுநோக்கினார். அவர் அவ்விதம் தன்னை நோக்குவதைக் கண்டதும் ராமுவின் கால்கள் ஆடவாரம்பித்தன. அந்தோ! அவ் வாலிபன் உடனே அவ்விடத்தை விட்டு ஓடிப்போய்விடலாமென்று நினைத்தபோதிலும், தன் பயத்தின் மிகுதியால் நகரச் சக்தியற்று, மரம்போல் நின்றான். ஆனால் மறுநிமிஷம் அனந்தராமய்யர், தன் நாற்காலியிலிருந்து தாவி எழுந்து, "ஹே சண்டாளா! என்ன கார்யம் செய்துவிட்டாய்?" என்று கர்ஜித்தவண்ணம், அவனை அடிக்கும் பொருட்டு. தன் வலது கரத்தை ஓங்கிக்கொண்டு, அவனை



நோக்கி ஓடி வரவே, ராமு, தான் மாடிப் படிகளின் ஸமீபத்தில் நிற்பதை பயத்தின் பலனாய் உணராமல், தன் இடதுகாலைப் பின்பக்கம் இழுக்கவே, ஆதாரமின்றி தடாவென்று பின்பக்கம் விழுந்தான்.

இதைக் கண்டதும் அனந்தராமய்யர் "ஹா!" என்று வீறிட்டு அலறினார். பிறகு அவரும் கீழே ஓடினார். இதற்குள் ராமு தன் சரீரம் முழுமையும் கண்கள் கூசத்தக்க பல பெரிய காயங்களுடன் அவ் வீட்டின் கீழ்பாகத்தில் பிரக்ஞையின்றி சவம்போல் கிடந்தான். இக் காக்ஷியைக் கண்டதும் அனந்தராமய்யர், தன் புதல்வன் செய்த எல்லாவற்றையும் மறந்து, "அப்பா! உன்னை நானே கொன்றுவிட்டேனே." என்று அலறியவண்ணம், அவனுடைய ஹிருதயத்தில் தன் கையை வைத்துப் பார்த்துவிட்டு, அவன் இன்னும் இறக்கவில்லையென்று தெரிந்துகொண்டார். இதற்குள் ராமு அவ்விதம் விழுந்ததால் உண்டான தடதடவென்ற சப்தத்தைக் கேட்டு, தோட்டக்காரன் முருகனும் சமையற்காரி அயிலாண்டம்மாளும் அங்கு ஓடிவந்து, ஒன்றும் புரியாமல் திகைப்புற்று, அசைவின்றி நின்றுகொண்டிருந்தார்கள். உடனே அனந்தராமய்யர் முருகனை ஓடிச் சென்று டாக்டர் குப்புஸ்வாமி அய்யரை அழைத்துவருமாறு உத்திரவிடவே, அக் கிழவன் வெளியே ஓடினான். பிறகு அனந்தராமய்யர், தன் ச[illegible]ம் குலுங்க சிறு குழந்தைபோல் அழுதவண்ணம் ராமுவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவனுடைய அழகிய முகத்தை உற்று நோக்கிவிட்டு, புலம்பவாரம்பித்தார். கடைசியில், "சரி; இவன் இறந்துவிடுவானென்பது நிச்சயம். ஆனால் இவனைக் கொன்றது நானென்பதில் சந்தேகமில்லை. நான், அவ்விதம் கோபத்தை மிஞ்சவிட்டு, இவனை நோக்கி ஓடிவராமலிருந்தால் இவன் விழக் காரணமில்லை. ஹே தெய்வமே! என் குழந்தையை பாபி நானே கொன்றுவிட்டேனே." என்று மறுபடியும் தன் தலையில் அறைந்துகொண்டார். கடைசியில், "சரி; இவன் இவ்விதம் கீழே விழுந்து இறந்தானென்பது வெளியாகக்கூடாது." என்று தீர்மானித்தார்.

ஆகவே, சற்று நேரத்திற்கெல்லாம் வந்த டாக்டர் குப்புஸ்வாமி அய்யர், ராமுவை நன்றாய்ப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு, அவன் இன்னும் 24 மணி சாவகாசத்திற்குள் இறந்துவிடுவானென்று கூறியதும், அனந்தராமய்யர், தன் புதல்வன் அவ்விதம் கீழே விழுந்ததை அறிந்த முருகன், அயிலாண்டம்மாள், குப்புஸ்வாமி அய்யர் இம் மூவரையும் அவ்விஷயத்தை வெளியிடாமலிருக்குமாறு கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே, அம் மூவரும் சம்மதித்தனர். பிறகு டாக்டர் குப்புஸ்வாமி அய்யர் தான் செய்யக்கூடியதைச் செய்துவிட்டுப் போய்விட்டார். அவர் சென்றதும், ராமு கிடந்த இடத்தின் சமீபத்தில் ஒரு படுக்கையைப் போட்டு, அதில் அவ் வாலிபனைத் தூக்கிப் படுக்கவைத்துவிட்டு, அவ்விரவு முழுமையும், அனந்தராமய்யர், ஊண் உறக்கமின்றி, தன் புதல்வன் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு, "அப்பா ராமு! வாஸ்தவத்தில் கொலை செய்த பலரை நான் என் சாமர்த்தியத்தினால் காப்பாற்றியிருந்தும், உன்னைக் காப்பாற்றும் வழியைத் தேடாமல், இப்படிக் கொன்றுவிட்டேனே. என் கண்மணீ! நான் என்னடா செய்வேன்?" என்றும், இன்னும் பலவிதங்களிலும் பிரலாபிக்கலானார்.

மறுநாட் காலை பொழுது விடிந்ததும், அனந்தராமய்யர் தன் தோட்டக்காரனை அழைத்து,

"முருகா! உடனே சென்று எப்படியாவது அந்த பக்கிரிசாமியை அழைத்துக்கொண்டுவா." என்று உத்திரவிடவே, அக் கிழவன் சென்று அரைமணி நேரத்திற்குள், பக்கிரிசாமியை அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். ராமுவின் நிலைமையைக் கண்டதும், பக்கிரிசாமி, திடுக்கிட்டவனாய்,

"அடாடா! ஐயாவுக்கு என்ன?" என்று வினவ, அனந்தராமய்யர்,

"அப்பா! நீதான் பக்கிரிசாமியோ?" என்று கேட்கவே, பக்கிரிசாமி 'ஆம்' என்று விடையளித்ததும், "அவனுக்கு உடம்பு சரியாயில்லை. நீ எனக்கு ஒரு காரியம்



செய்யவேண்டுமே." என்றார். பக்கிரிசாமி, சிறிதும் தயக்கமின்றி,

"என்ன வேண்டும் சொல்லுங்கள். ஐயாவுக்காக நான் என் உயிரையும் கொடுக்கத் தயார்." என்று கூறவே, அனந்தராமய்யர்,

"சரி; மாடிக்கு வா. நான் உன்னிடம் கடிதம் ஒன்று எழுதிக் கொடுக்கிறேன். நீ அதை எடுத்துக்கொண்டு உடனே மாயவரம் சென்று அங்கிருந்து ஒரு டாக்டரை அழைத்துக்கொண்டு வரவேண்டும். இவ்வூர் டாக்டர் பிரயோஜனமில்லை. சரி; நீ முதலில் மாடிக்குப் போ. நான் இதோ வந்துவிட்டேன்." என்று கூறவே, பக்கிரிசாமி மாடிக்கு ஓடினான். அவன் தலை மறைந்ததும், அனந்தராமய்யர், தன் தோட்டக்காரனை நோக்கி,

"முருகா! நீயும் வந்து என் பக்கத்தில் இரு. இந்தப் பயல் ஏதேனும் வம்பு செய்தால்—" என்று மேலே பேசுமுன், அக் கிழவன்,

"யஜமானே! அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்." என்று கூறவே, அனந்தராமய்யர், திரும்பி கொஞ்ச தூரத்தில் நின்றுகொண்டிருந்த அயிலாண்டம்மாளை ராமுவின் பக்கத்திலிருக்குமாறு சொல்லிவிட்டு, மாடிக்குச் சென்றார்.

நிற்க, மார்டிக்குச் சென்ற பக்கிரிசாமி, ராமுவின் அறைக்குள் நுழைந்ததும், அம் மேஜையின்மீது இன்னும் இருந்த ராஜலெக்ஷ்மியின் நகைகளைக் கண்டதும், திடுக்கிட்டவனாய், தன் அபாயத்தை உணர்ந்து, மறுபடியும் வெளியே ஓடினான். ஆனால் அங்கு தயாராய் நின்றுகொண்டிருந்த முருகன், அவன்மீது புலிபோல் பாய்ந்து, அவனுடைய குடுமியைப் பற்றிக்கொண்டு,

"போக்கிரி நாயே! உள்ளே போ." என்று வெறுப்புடன் கூறியவண்ணம், அவனை மறுபடியும் அவ்வறைக்குள் வேகவாய்த் தள்ளவே, பக்கிரிசாமி தரையில் ஒரு மூட்டை போல் விழுந்தான்.

மறுநிமிஷம் அவ்வறைக்குள் நுழைந்த அனந்தராமய்யர், அவனை சினத்துடன் நோக்கியவண்ணம்,

"அடே சண்டாளா! நான் சொல்வதுபோல் நீ உடனே செய்யவேண்டும். இல்லாவிட்டால் சிறிதும் தாக்ஷண்யமில்லாமல் உன்னை உடனே போலீஸாரிடம் ஒப்புவித்துவிடுவேன். நீ செய்த எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். என் பிள்ளை எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு இதோ கடிதம் எழுதியிருக்கிறான். நீயும் நீ செய்ததை ஒப்புக்கொண்டு உடனே ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கவேண்டும்." என்று கூறவே, பக்கிரிசாமியின் முகம் வெளுத்தது. அவன், மெள்ள எழுந்து தன் குடுமியை முடிந்துகொண்டு மடேரென்று அனந்தராமய்யர் பாதங்களில் விழுந்து,

"ஸ்வாமி! என்னைக் காப்பாற்றவேண்டும்." என்று கெஞ்சவே, அனந்தராமய்யர்,

"அதைப்பற்றி பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் எழுந்து நான் சொல்வதுபோல் ஒரு கடிதம் எழுது." என்று கூறவே, பக்கிரிசாமி, தான் மறுப்பது பிசகென உணர்ந்து, எழுந்து நின்றான்.

மேலே நடந்ததை சுருக்கிச் சொல்லிவிடுவோம். ஒரு மணி நேரத்திற்குள் அனந்தராமய்யர், தன் இஷ்டப்பிரகாரம் பக்கிரிசாமி எழுதிய ஒரு கடிதத்தை வாங்கிக்கொண்டு,

"அடே! இன்னும் ஒரு வாரத்திற்குள் நீ இவ்வூரை விட்டு ஓடிப்போய்விடவேண்டும். 8வது தினம் நான் உன்னை இவ்வூரில் பார்க்கும்பக்ஷத்தில் உன்னை உடனே போலீஸார் வசம் ஒப்புவித்துவிடுவேன். சரி; நீ போகலாம்." என்று கூறவே, பக்கிரிசாமி, பிழைத்தது புனர்ஜன்மமென்று நினைத்தவன்போல், அவ்வறையிலிருந்து ஓடினான். அவன் சென்றதும், அனந்தராமய்யர், தன் புதல்வன், பக்கிரிசாமி இவ்விருவரும் எழுதிய கடிதங்களை மடித்துத் தன் பணப் பையில் வைத்துக்கொண்டு, மேஜையின் மீதிருந்த ராஜலெக்ஷ்மியின் நகைகளை மறுபடியும் ஒரு



முடிச்சாய்க் கட்டி எடுத்துக்கொண்டு, சமீபத்தில் நின்றுகொண்டிருந்த தன் தோட்டக்காரனை நோக்கி,

"முருகா! சென்று டாக்டரய்யரவை அழைத்துக்கொண்டுவா." என்று கூறிவிட்டு, தன் கையிலிருந்த அந்நகை முடிச்சுடன் சமீபத்திலிருந்த ஒரு பீரோவை நோக்கி நடந்தார்.

* * * *

அதே தினம் பிற்பகல் 3 மணிக்கு ராமு இறந்தான். ஜனங்கள் கேட்டபொழுது அனந்தராமய்யர், தன் பிள்ளைக்கு ஏற்கனவே ஹிருதய சம்பந்தமான ஒரு வியாதி உண்டென்றும், அவன் அதன்பலனாய் திடீரென்று இறந்தானென்றும் சொல்லிவிட்டார். இதில் டாக்டர் குப்புஸ்வாமி அய்யரும் அவருக்கு உட்கையென்பதை நாம் சொல்லவேண்டியது அனாவசியம். ராமு இறந்த மறு தினமே, அனந்தராமய்யர், தன் பங்களாவிலிருந்த சாமான்களையெல்லாம் சேர்த்து மாடி ஹாலில் போட்டுவிட்டு, அதைப் பூட்டிக்கொண்டு, அயிலாண்டம்மாளுடன் மாயவரம் போய்விட்டார். ஆனால் போகுமுன் முருகனை அழைத்து, கண்களில் நீர் தளும்ப, விசனத்துடன்,

"முருகா! இனி நான் சாகும்வரையில் இவ் வீட்டிற்குள் நுழையமாட்டேன். இதில் வேறு எவரையும் குடிவைப்பதிலும் எனக்கு இஷ்டமில்லை. ஆகவே, இனிமேல் நீதான் இவ்வீட்டைப் பார்த்துக்கொள்ளவேண்டும். என் உத்தரவில்லாமல் நீ ஒருவரையும் இவ் வீட்டிற்குள் விடக்கூடாது. அப்படி நீ விடுவாயாகில், என் சோற்றைத் தின்றுவிட்டு நீ எனக்கு துரோகம் செய்ததாகும். நீ புத்திசாலியானதாலும், உனக்கு என் குடும்பத்தில் மிகவும் பிரியமும், பற்றும் உண்டென்று எனக்கு நன்றாய்த் தெரியுமாகையாலும், உன்னை நான் நம்புகிறேன். நீ உயிருடன் இருக்கும்வரையில் வேறு இடத்தில் வேலைக்குப் போகவேண்டாம்." என்றார்.

பிறகு, பக்கிரிசாமி, ராமு இறந்த மூன்றாவது தினமே, ரங்கூனுக்குப் போய்விட்டான். அங்கு சென்றதும் சபா

பதி பிள்ளை என்ற மாறு பெயருடன் தன் கையிலிருந்த பணத்தைக்கொண்டு பேருக்கு வெற்றிலை பாக்குக் கடை ஒன்று வைத்தான். ஆனால் சீக்கிரம் மறுபடியும் அங்கிருந்த சில காலாடிகளுடன் சேர்ந்துகொண்டு, சூதாட்டம் குடி முதலிய துர்மார்க்கங்களில் பிரவேசிக்கலானான். இவ்விதம் சுமார் $9\frac{1}{2}$ வருஷகாலம் கழிந்தது. இதற்குள் பக்கிரிசாமி தன் வியாபாரத்திலிருந்தும் சூதாட்டத்திலிருந்தும் கிட்டத்தட்ட 5000 ரூ. பணத்தையும், சிங்காரவேலு, சாரங்கபாணி என்ற இரு தோழர்களையும் சம்பாதித்துவிட்டான். இந்த சிங்காரவேலுவும் சாரங்கபாணியும் மகா அயோக்கியர்களென்பதை நாம் சொல்லவேண்டியது அனாவசியம். ஆனால் அவ்விருவரும் பக்கிரிசாமியிடம் தப்ப வழியின்றி மாட்டிக்கொண்டிருந்தனர். எப்படியெனில், சுமார் 2 வருஷ காலத்திற்குமுன், அவ்விருவருமாய்ச் சேர்ந்துகொண்டு, தங்களுடைய விரோதி ஒருவனைக் கொலைசெய்ய, அதைச் செய்தது யாரென்று போலீஸாரால் கண்டுபிடிக்கப்படா விட்டாலும், அதைச் செய்தது அவர்கள்தானென்று எளிதில் ரூபிக்கக்கூடிய சில கடிதங்கள் நம் பக்கிரிசாமியிடம் அகப்பட்டுவிட்டன. எனவே, பக்கிரிசாமி, அக் கடிதங்கள் தன்னிடம் இருந்த தைர்யத்தினால், அவர்களைத் தன் இஷ்டப்படி ஆட்டிவந்தான். சிங்காரவேலுவும் சாரங்கபாணியும் வாஸ்தவத்தில் பக்கிரிசாமியைத் தொலைக்கும் வழியையே சதா யோசித்துக்கொண்டிருந்தபோதிலும், வெளிக்கு அவனுடைய ஆப்த சினேகிதர்கள்போல் பாசாங்கு செய்து வந்தனர்.

மனிதனென்று பிறந்த ஒவ்வொருவனுக்கும் தான் பிறந்து வளர்ந்த ஊரில் ஒரு பற்றுதலும், தன் வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்தோ அல்லது வேறு எக் காரணத்தாலோ வெளியூர்களில் இருக்க நேரிட்டால் முடியும்பொழுது தான் பிறந்து வளர்ந்த அவ்வூருக்குச் சென்று அதில் கொஞ்ச காலமாவது இருக்கவேண்டுமென்ற ஆசையும், இருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே, நம் பக்கிரிசாமி, நாம் சொன்ன அந்த $9\frac{1}{2}$ வருஷகாலம் முடிந்ததும், தன்னைத் தானே கட்டுப்படுத்தமுடியாதவனாய், மறுபடியும் குற்றாலம் வரத் தீர்மானித்தான். இன்னும், அதற்குள் குற்றாலத்தில் எல்லோரும் அக் கொலைகளைப்பற்றி மறந்திருப்பார்களென்றும், அப்படியே சிலருக்கு ஞாபகமிருந்தபோதிலும் அவைகளைச் செய்தது தானென்று அவர்கள் சந்தேகிக்கக் காரணமில்லையென்றும் நம்பி, அவனுடன் வரப் பிரியப்பட்ட சாரங்கபாணியையும் சிங்காரவேலுவையும் அழைத்துக்கொண்டு, ரங்கூனைவிட்டுப் புறப்பட்டான். ஆனால் நாகப்பட்டணம் வந்து சேர்ந்ததும், உடனே குற்றாலம் போகாமல், தன் தோழன் சாரங்கபாணியின் சொந்த ஊராகிய தஞ்சாவூரில் சில நாட்கள் இருக்கத் தீர்மானித்தான். பிறகு தஞ்சாவூர் வந்து சேர்ந்ததும், தன் மற்றொரு தோழன் சிங்காரவேலுவை, வக்கீல் அனந்தராமய்யரைப்பற்றி விசாரித்துவரும்பொருட்டு, மாயவரம் அனுப்பவே, போய்விட்டுத் திரும்பிவந்த சிங்காரவேலு, வக்கீல் அனந்தராமய்யர் இன்னும் அதே ஊரில் இருந்தாகக் கூறினான். தான் குற்றாலத்தில் அவரிடம் எழுதிக்கொடுத்த அக் கடிதம் இன்னும் அனந்தராமய்யரிடம் இருக்குமானால், தான் கவலையற்று அப்பக்கத்திலிருப்பது முடியாத காரியமென்று நினைத்து பக்கிரிசாமி, அக் கடிதம் இன்னும் அவரிடம் இருக்கிறதாவென்பதை அறிந்து, அப்படி இருக்கும்பக்ஷத்தில் அதைக் களவாடும்பொருட்டு, தான் தஞ்சாவூர் வந்துசேர்ந்த மூன்று மாதகாலத்திற்குள், தந்திரமாய் தன் நண்பன் சிங்காரவேலுவை வக்கீல் அனந்தராமய்யருடைய வீட்டில் ஒரு வேலைக்காரனாக நியமிக்க ஏற்பாடு செய்துவிட்டான். ஆனால் அனந்தராமய்யர் உயிருடன் இருந்தவரையில், சிங்காரவேலு எவ்வளவோ முயன்றும், அக் கடிதம் இன்னும் அவரிடம் இருந்ததாவென்பதையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

சிங்காரவேலு அனந்தராமய்யருடைய வீட்டில் வேலைக்காரனாக நியமிக்கப்பட்டு இரண்டு மாதங்களாகுமுன், அவருக்கு இடது உள்ளங்கையில் சிறிய சிரங்கு

ஒன்று புறப்பட்டு, அது அவ்வூர் டாக்டர் ஒருவரால் கீறப்பட்டது. அது கீறப்பட்டு பல தினங்கள் கழிந்தும் அப்புண் ஆறாததால், அதைக் கீறிய டாக்டர் சந்தேகித்து, அவருடைய நீரைப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு, அவருக்கு நீர் ரோகமிருப்பதாகக் கூறவே, (அவ் வியாதி உள்ளவர்களுக்கு சரீரத்தில் ரணம் ஏற்பட்டால், அது மிகவும் அபாயத்திற்கிடமென்று அவருடைய நண்பர்களில் சிலர் சொல்லி அவர் கேட்டிருந்ததால்) அனந்தராமய்யர் கவலையுற்று கலங்கலானார். இன்னும், மேலும் சில தினங்கள் கழியுமுன் அவருடைய தலையில் பெரிய மற்றொரு சிறங்கு கிளம்பவே, அவர், தான் பிழைப்பது அசாத்தியமென்று நினைத்து, தான் அதுவரையில் மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டிருந்த (ராமுவும் பக்கிரிசாமியும் எழுதிய) அக் கடிதங்களை எடுத்து, அதில் பக்கிரிசாமியின் கடிதத்தில் பம்பாயிலிருந்த தன் புதல்வன் தியாகராஜனுக்கு சில வரிகள் தன் கரத்தால் எழுதிவிட்டு, அவ்விரு கடிதங்களையும் ஒரு பெரிய உறையில் வைத்து, அதை ஒட்டி, அதற்கு அரக்கு முத்திரை வைத்து, தன் நண்பர் ஜகதீசய்யரை வரவழைத்து, அதை அவரிடம் கொடுத்து, "ஜகதீசா! இதற்குள் சில முக்கிய கடிதங்கள் இருக்கின்றன. அக் கடிதங்களில் அடங்கியிருக்கும் விஷயங்கள் வெளியானால் என் வம்சத்திற்கு மிகவும் அபக்கியாதி வந்துவிடும். ஆகையால் நீ இந்த இப்படியே ஜாக்கிரதையாக உன்னிடம் வைத்திருந்து, நான் இறந்துவிட்டால் என் பிள்ளை தியாகராஜன் வந்ததும் அவனிடம் நேரில் கொடுத்துவிடு." என்றார். பிறகு ஜகதீசய்யர் செய்யவேண்டிய இதர காரியங்களையும் அவர் சொல்லிமுடித்த அரை மணி நேரத்திற்குப் பிறகு, அவருடைய தலையிலிருந்த சிறங்கைக் கீறும்பொருட்டு அவருடைய கைச் சிறங்கைக் கீறிய அதே டாக்டர் வந்து, ஒரு மணி நேரத்திற்குள் தன் காரியத்தை முடித்துவிட்டு, தான் மறுபடியும் அன்று மாலை வருவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டார். ஆனால் அவர் மறுபடியும் வருமுன் அனந்தராமய்யருடைய காலமும் முடிந்தது.



நிற்க, பக்கிரிசாமியின் தோழன் சிங்காரவேலு, அவ் வீட்டிற்கு வந்ததுமுதற்கொண்டே, அனந்தராமய்யர் பிறருடன் பேசும்பொழுதெல்லாம் மறைவில் நின்றுகொண்டு உற்றுக் கேட்பது வழக்கமாகையால், அன்று அவர் தன் நண்பர் ஜகதீசய்யரிடம் அக் கடிதங்களைப்பற்றி கூறியதையும் அவைகள் அவரிடம் கொடுக்கப்பட்டதையும் தெரிந்துகொள்ளவே, அவன் அதை உடனே பக்கிரிசாமிக்குத் தெரிவித்தான். இதை அறிந்ததும் பக்கிரிசாமி, அக் கடிதங்களை ஜகதீசய்யருடைய வீட்டிலிருந்து களவாடத் தீர்மானித்தான். முதலில் அவன், அவைகளைப் பிறருடைய உதவியின்றி தானே களவாடத் தீர்மானித்து, பலதரம் பலவிதங்களில் முயன்றும் அவைகளை அவன் களவாடமுடியாததால், ஜகதீசய்யருடன் நெருங்கிப் பழகும் ஒருவருடைய உதவி தனக்கு மிகவும் அவசியமென்று நினைத்து, நம் குமாஸ்தா வாஞ்சி அய்யரை தன் கக்ஷியில் சேர்த்துக்கொண்டான். ஆனால் அவன் அவரிடம் பக்கிரிசாமியென்பது தன் தமயனென்று கூறினான். வாஸ்தவத்தில் அவனுடைய பெயர் பக்கிரிசாமியென்பது அதுவரையில் அவனுடைய நண்பர்கள் சிங்காரவேலுக்கும் சாரங்கபாணிக்கும் தெரியாது. ஆனால், அவன் அக் கடிதங்களைக் களவாட அவ்வளவுதூரம் சிரமப்பட்டதைக் கண்டதுமே கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்த நம் வாஞ்சி அய்யர் அவன்தான் பக்கிரிசாமியென்று ஏற்கனவே நிச்சயித்துவிட்டார்.

பிறகு அவர்கள் செய்த எல்லாவற்றையும் நம் நேயர்கள் அறிவார்கள்.

இனி நம் கதையைக் கவனிப்போம்.

---

## அத்தியாயம் 13.

11வது அத்தியாயத்தின் இறுதியில் சபாபதி பிள்ளை என்று மாறு பெயர் வைத்துக்கொண்டிருந்த பக்கிரிசாமியும் (இனி நாம் அவனை பக்கிரிசாமி என்றே அழைப்போம்

குமாஸ்தா வாஞ்சி அய்யரும், சிங்காரவேலுக்கு தியாக ராஜன் வேஷம் போட்டு,வக்கீல் ஜகதீசய்யரிடம் அனுப்பத் தீர்மானித்தார்களென்று கூறினேமல்லவா?

ஆகவே, வாஞ்சி அய்யரும் பக்கிரிசாமியும் அவ்விதம் தீர்மானித்த இரண்டாவது தினம் காலை சுமார் 9 மணிக்கு வாஞ்சி அய்யர் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து வக்கீல் ஜகதீசய்யரிடம் கொடுக்கவே, ஜகதீசய்யர் அதைப் பிரித்து கீழ்க்கண்டவாறு வாசித்தார் :—

" லிங்கச் செட்டித் தெரு, சென்னை.

— —

வக்கீல் ஜகதீசய்யர் அவர்களுக்கு தியாகராஜன் அநேக கோடி சாஷ்டாங்க நமஸ்காரம். உபய க்ஷேமம். நான் முதலில் மார்ச்சுமாதம் வந்தால் போதுமென்று நினைத்தேன். பிறகு சீக்கிரம் போவதே உசிதமென்று நினைத்து புறப்பட்டு இன்று காலை இங்கு வந்துசேர்ந்தேன். நாளை மாலை ராமேசுவரம் எக்ஸ்பிரஸில் மாயவரம் வருகிறேன். முடியுமானால் தயவுசெய்து ஸ்டேஷனில் சந்திக்கவும். மற்றவை நேரில்.

வேணும் நமஸ்காரம்,

தியாகராஜன்."

இக் கடிதத்தை வாசித்ததும், ஜகதீசய்யர் வியப்புற்று கொஞ்சநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு,

" இவனுடைய கார்யங்களெல்லாம் விநோதமாயிருக்கின்றனவே. சரி; அவன் இன்று மாலை இங்கு வருகிருன் போலிருக்கிறது. ஆமாம்; ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் இவ்வூருக்கு எத்தனை மணிக்கு வருகிறது? " என்று வினவ, வாஞ்சி அய்யர்,

" மத்தியானம் 3-48க்கு வருகிறது. " என்று விடையளித்தார். ஜகதீசய்யர்,

" சரி; ஸ்டேஷனுக்குப் போகவேண்டும். ஒருக்கால் அவனைக் கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கலாம். ஏனென்றால் நான் அவனைப் பார்த்து வெகுகாலமாய்விட்டது.



நீரும் ஸ்டேஷனுக்கு வாருமே." என்று அழைக்கவே, வாஞ்சி அய்யர்,

" அதற்கென்ன? அவசியம் வருகிறேன்." என்றார்.

எனவே, அன்று பிற்பகல் 3½ மணிக்கே, அவ்விருவரும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விட்டனர். சற்றுநேரத்திற்கெல்லாம் வண்டி வந்துசேர்ந்ததும் வாஞ்சி அய்யர்,

"தியாகராஜா! தியாகராஜா!!" என்று உரத்த குரலில் அழைக்கவே, தியாகராஜ வேஷம் போட்டுக்கொண்டிருந்த சிங்காரவேலு, ஒரு மூன்ருவது வகுப்பு வண்டியிலிருந்து கீழே இறங்கி, புன்சிரிப்புடன் வாஞ்சி அய்யரை நோக்கி, மிகவும் மரியாதையுடன்,

" நீங்கள்தான் ஜகதீசய்யரோ? " என்று வினவ, வாஞ்சி அய்யர் பக்கத்திலிருந்த வக்கீல் ஜகதீசய்யரைக் காண்பித்தார். உடனே சிங்காரவேலு, நம் வக்கீலுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

" நான் இதுவரையில் உங்களைப் பார்த்ததே இல்லை. என்ன சௌக்யந்தானே? " என்று மிகவும் நம்பத்தக்க விதம் அவருடைய யோகக்ஷேமங்களை விசாரித்தான். ஜகதீசய்யர், அவனை உற்றுநோக்கியவண்ணம்,

" சௌக்கியந்தான். நீ உன் தாயாரைப்போலிருக்கிருயென்று தோன்றுகிறது. நான் அவளைப் பார்த்தது கிடையாது. அனந்தராமனுடைய முகஜாடை உன்னிடம் இல்லவே இல்லை." என்று கூறவே, சிங்காரவேலு,

" என் தயார் எப்படியிருந்தாளென்பது எனக்கும் தெரியாது. நான் பிறந்த அதே தினம் அவளை விழுங்கிவிட்டேனென்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும்." என்ருன்.

இதைக் கேட்டதும் வாஞ்சி அய்யர், " நான் இவனைப் பைத்தியமென்று நினைத்தேனே. பேஷ்! இவன் மகா வேலைக்காரன்போலிருக்கிறது." என்று தன்னுள் மெச்சிக்கொண்டார்.

அரைமணி நேரத்திற்குள் அம்மூவரும் வக்கீல் ஜகதீசய்யருடைய வீட்டிற்கு வந்துசேர்ந்தனர். உடனே, வக்கீல், தன குமாஸ்தாவை நோக்கி,

"உள்ளே போய் காப்பி கொண்டுவரச்சொல்லும்." என்று உத்தரவிட்டார். வாஞ்சி அய்யர் சென்றதும், சிங்காரவேலு,

"ஆமாம்; இவர் யார்?" என்று முன்பின் தெரியாதவன்போல் விசாரிக்கவே, ஜகதீசய்யர்,

"அவர் என்னுடைய குமாஸ்தா. பரம யோக்கியர். என்னிடம் வெகுகாலமாக இருக்கிறார்." என்று விடையளித்துக்கொண்டிருக்கையில், தன் பிறந்த வீட்டிலிருந்து முதல் நாள் திரும்பிவந்த ஜகதீசய்யருடைய சம்ஸாரம் காப்பியுடன் அவ்வறைக்குள் நுழைந்தாள். அம் மாது, காப்பியை அவர்கள் எதிரில் வைத்துவிட்டு, சிங்காரவேலுவை உற்றுநோக்கவே, ஜகதீசய்யர்,

"அடியே! இவன்தான் தியாகராஜன்." என்றார். உடனே சிங்காரவேலு,

"என்ன அம்மாமி! சௌக்யமா?" என்று அவளையும் விசாரிக்கவே, நம் வாஞ்சி அய்யர், "சபாஷ்! இவன் பார்ப்பதற்குத்தான் பிராமணனைப்போல் இருக்கிறானென்றால் பேச்சும் அபாரமாயிருக்கிறதே." என்று மறுபடியும் தன்னுள் சிங்காரவேலுவை மெச்சிக்கொண்டார்.

பிறகு சுமார் 1 மணிநேரம் ஜகதீசய்யரும் சிங்காரவேலுவும் வக்கீல் அனந்தராமய்யருடைய குடும்பத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஏற்கனவே வாஞ்சி அய்யர் சிங்காரவேலுக்கு எல்லாம் சொல்லிக்கொடுத்திருந்ததால், சிங்காரவேலு மிகவும் நம்பத்தக்கவிதம் பேசலானான். கடைசியில் ஜகதீசய்யர்,

"சரி; இப்பொழுது என்ன செய்வதாய் உத்தேசம்?" என்று கேட்க, சிங்காரவேலு,



"உத்தேசமென்ன? நாம் ஒன்றும் செய்வதிற்கில்லை. இப்பொழுது நான் 15 நாட்கள்தான் லீவ் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கனவே அதில் 3 நாட்கள் போய்விட்டன. மறுபடியும் திரும்பிப்போவதற்கு 3 நாட்கள் வேண்டும். ஆகையால் 9 நாட்கள்தான் பாக்கி. பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் இருந்து இருந்து எனக்கு சலித்துப்போய்விட்டதால் இந்த 9 நாட்களையும் குற்றாலத்தில் கழிக்கலாமென்று நினைக்கிறேன். இதுவரையில் நான் அக் கிராமத்தையும் அதில் எங்களுக்கிருக்கும் பங்களாவையும் பார்த்ததில்லையென்பது உங்களுக்கே தெரியும். ஆமாம்; நான் பம்பாயிலிருந்து சாரங்கபாணி என்ற ஒருவனை உங்களிடம் அனுப்பினேனே. அவன் வரவில்லையோ?" என்று வினவ, ஜகதீசய்யர்,

"வந்தான். அவன் இப்பொழுது முருக விலாஸின் மாடியில் வேலைசெய்துகொண்டிருக்கிறான். சரி; நீ எப்பொழுது குற்றாலம் போகவேண்டும்?" என்று வினவினார்.

சிங்காரவேலு:—ஒன்றும் அவசரம் இல்லை. ஆனால் கூடிய சீக்கிரம் போவது நலம். ஏனென்றால் எனக்கு அதிக நாட்களில்லை.

ஜகதீசய்யர்:—அதில் என்ன கஷ்டம்? ஆனால் நீ அந்த பங்களாவில் இருக்கவேண்டுமானால் அதன் மாடியில்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் அதன் கீழ் பாகத்தில் கிருஷ்ணமூர்த்தி என்ற ஒருவரைக் குடிவைத்திருக்கிறேன்.

சிங்காரவேலு:—பேஷ்! அதற்குள் குடிவைத்துவிட்டீர்களா? ரொம்ப சந்தோஷம். ஆமாம்; நான் மாடியில் இருப்பதானால், அதை முதலில் சுத்தம் செய்யவேண்டுமே. அது வெகுகாலமாக—

ஜகதீசய்யர்:—ஆம்; சுத்தம் செய்யத்தான் வேண்டும். இருக்கட்டும்; இன்று இரவே நான் என் குமாஸ்தாவை அனுப்பி வேண்டியதைச் செய்யச் சொல்லுகிறேன். பிறகு நீயும் நானும் நாளைக் காலமே போவோம்.

சிங்காரவேலு:—பேஷ்! அப்படியே செய்வோம். சரி; நான் கொஞ்சம் உலாவிவிட்டு வருகிறேன். (என்று கூறிய வண்ணம் எழுந்து நின்றான் )

உடனே ஜகதீசய்யர், தன் குமாஸ்தாவை நோக்கி,

"வாஞ்சி அய்யரே! நீரும் கூடப்போம்." என்று கூறிவிட்டு, மறுபடியும் சிங்காரவேலுவை நோக்கி, "தியாகராஜா! நீ இவருடன் போ. நானும் கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருகிறேன்." என்று கூறியவண்ணம் எழுந்து துரிதமாய் வெளியே சென்றார்.

வக்கீல் சென்றதும் வாஞ்சி அய்யர், சிங்காரவேலுவை நோக்கி சிறித்துக்கொண்டே,

"தியாகராஜய்யர்வாள்! வாருங்கள் ; என்னுடைய வீட்டிற்குப் போவோம்." என்றார். உடனே இருவரும் வாஞ்சி அய்யருடைய வீட்டுக்குச் சென்று சுமார் 1 மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன் முடிவில், சிங்காரவேலு, திமிருடன்,

"ஐயரே! இப்பொழுது என்ன சொல்லுகிறீர்? உம்முடைய வக்கீலால் என்னை அடையாளம் கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்க, நம் குமாஸ்தா,

"அது ஒரு மண்டு. அதற்கு மூளையே கிடையாது. சரி; வா. கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருவோம்." என்று அழைக்கவே, சிங்காரவேலு,

"நாழியாய்விட்டது ; வாரும். வக்கீல் வீட்டுக்குப் போகலாம்." என்றான்.

அவ்விருவரும் மறுபடியும் ஜகதீசய்யருடைய வீட்டிற்குப் போனபொழுது, வக்கீல் தன் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர், வாஞ்சி அய்யரைக் கண்டதும்,

"நீர் இந்த $8\frac{1}{4}$ மணி வண்டியில் குற்றாலம் சென்று, முருகனை வைத்துக்கொண்டு, முருக விலாஸின் மாடி ஹாலை சுத்தம்செய்து தயாராய் வையும். நானும் தியாகராஜனும் காலமே வருகிறோம்." என்று கூறவே, நம் குமாஸ்தா அப்படியே செய்வதாக வாக்களித்துவிட்டு வெளியே சென்றார்.



அன்று இரவு சுமார் 8 மணிக்கு, வாஞ்சி அய்யர், குற்றாலம் போகும்பொருட்டு, ரயிலை எதிர்பார்த்தவண்ணம், மாயவரம் ரயில்வே ஸ்டேஷனில் நின்றுகொண்டிருக்கையில், வக்கீல் பாலசுப்பிரமணியய்யருடைய புதல்வன் முத்துஸ்வாமி சமீபத்தில் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவர், அவனிடம் சென்று,

"முத்துஸ்வாமி! என்ன சமாசாரம்?" என்று விசாரிக்கவே, அவ் வாலிபன்,

"நான் இந்த வண்டியில் குற்றாலம் போகிறேன்." என்றான். வாஞ்சி அய்யர், வியப்புற்று,

"அப்படியா? நானும் குற்றாலம்தான் போகிறேன். நீ போகும் கார்யமென்ன?" என்று வினவ, முத்துஸ்வாமி,

"என் அத்தை பிள்ளை கிருஷ்ணமூர்த்தி அவ்வூரில் முருக விலாஸில் குடியிருப்பது உமக்கே தெரியும். சில தினங்களுக்குமுன் அவன் அதன் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டான். நான் ஏற்கனவே ஒருதரம் போய் அவனைப் பார்த்தேன். அவனுக்கு இப்பொழுது எப்படியிருக்கிறதென்று அப்பா பார்த்துவிட்டு வரச்சொன்னார்." என்று விடையளித்தான்.

அவ்விருவரும் குற்றாலம் வந்துசேர்ந்தபொழுது இரவு சுமார் 9 மணி இருக்கும். அவர்கள் ஸ்டேஷனைவிட்டு வெளியில் வந்ததும், சமீபத்தில் நின்றுகொண்டிருந்த சாரங்கபாணி, வாஞ்சி அய்யரைக் கண்டதும் அவரைத் தான் சிறிதும் எதிர்பாராதவன்போல்,

"ஸ்வாமி! நமஸ்காரம்." என்று தன் கரங்களைக் கூப்பியவண்ணம் அவரை நோக்கி வரவே, நம் குமாஸ்தா,

"அடாடா! யார் சாரங்கபாணியா? பேஷ்! நானே யுன்னைத் தேடிப்பிடிக்கவேண்டுமென்று இருந்தேன். எனக்கு உன்னிடம் இருக்கும் முருக விலாஸின் மாடிச் சாவி

வேண்டும்—" என்று மேலே பேசுமுன், வக்கீல் பாலசுப்பிரமணியய்யருடைய பிள்ளை முத்துஸ்வாமி,

"வாஞ்சி அய்யரே! நீர் பேசிவிட்டு வாரும். நான் முதலில் போகிறேன்." என்று கூறிவிட்டு, முருக விலாஸை நோக்கி துரிதமாய் நடந்தான். அவனுடைய தலை மறைந்ததும் சாரங்கபாணி, ஆவலுடன் தாழ்ந்த குரலில்,

"ஸ்வாமி! வக்கீல் சிங்காரவேலுவை அந்த பம்பாய் ஐயர்தானென்று நம்பிவிட்டாரா?" என்று வினவ, வாஞ்சி அய்யர்,

"நம்பாமல் எப்படி இருக்க முடியும்? இப்பொழுது அவனைப் பார்த்தால் உனக்கே அடையாளம் புரியாது. சரி; நேரமாகிறது; நான் போகிறேன்." என்று கூறிவிட்டு, சாரங்கபாணியிடமிருந்து அச் சாவியை வாங்கிக்கொண்டு, அவரும் முருக விலாஸை நோக்கி துரிதமாய் நடந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர் கிருஷ்ணமூர்த்தியின் அறைக்குள் நுழைந்தபொழுது அவ் வாலிபன் தன் வழக்கப் பிரகாரம் 'ஐயோ! அப்பா! என்று முனகியவண்ணம் படுத்துக்கொண்டிருந்தான். அவனுடைய பக்கத்திலிருந்த முத்துஸ்வாமி வாஞ்சி அய்யர் வந்திருப்பதாகக் கூறிய பிறகே, கிருஷ்ணமூர்த்தி, தன் தலையைத் திருப்பி, நம் குமாஸ்தாவைப் பார்த்துவிட்டு மிகவும் சிரமத்துடன் பேசுபவன் போல்,

"வாஞ்சி அய்யரே! வாரும். பம்பாயிலிருந்து இந்த பங்களாவின் சொந்தக்காரர் வந்திருக்கிறாராமே? இப்பொழுதுதான் இவன் (பக்கத்திலிருந்த முத்துஸ்வாமியைக் காண்பித்து) சொன்னான்." என்று கூறவே, வாஞ்சி அய்யர்,

"ஆமாம். அவர் நாளைக் காலமே இங்கு வருகிறார். அவர் சில நாட்கள் இவ்வூரில் இருக்கப் பிரியப்படுகிறார். ஆகையால் மாடியை சுத்தம்செய்து தயாராய் வைக்கும் பொருட்டு, வக்கீல் என்னை முதலில் அனுப்பினார். சரி; இப்பொழுது உமக்கு எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தார்.



கிருஷ்ணமூர்த்தி தக்கபடி விடையளித்ததும், வாஞ்சி அய்யர், "சரி; உடம்பை ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளும். நான் முருகனை வைத்துக்கொண்டு மாடியை சுத்தம் செய்ய வேண்டும்." என்று கூறவே, கிருஷ்ணமூர்த்தி,

"அக் கிழவனும் நடமாட்டமில்லாமல் இருக்கிறானே. பாவம்! அவனால் என்ன முடியும்?" என்று கூறவே, நம் குமாஸ்தா,

"அடாடா! அவனுக்கு என்ன வந்துவிட்டது? சரி; போய் நானாவது சுத்தம் செய்கிறேன்." என்று கூறிய வண்ணம் பரபரப்புடன் வெளியே சென்றார்.

* * * *

மறுநாட் காலை சுமார் $8\frac{1}{2}$ மணி இருக்கும்.

அச்சயம் தியாகராஜ வேஷம் போட்டுக்கொண்டிருந்த சிங்காரவேலு, வக்கீல் ஜகதீசய்யர், குமாஸ்தா வாஞ்சி அய்யர் இம் மூவரும் குற்றாலம் ரயில்வே ஸ்டேஷனைவிட்டு வெளியில் வந்துகொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் வெளியே வந்ததும், எதிர் திசையிலிருந்து டாக்டர் குஞ்சிதபாதம் ஸ்டேஷனை நோக்கி வந்துகொண்டிருக்கவே, அவரைக் கண்ட வக்கீல் ஜகதீசய்யர், தன் குமாஸ்தாவை நோக்கி,

"நீர் தியாகராஜனை அழைத்துக்கொண்டு முதலில் முருக விலாஸுக்குப் போம். நான் டாக்டருடன் கொஞ்சம் பேசிவிட்டு வருகிறேன்." என்று கூறவே, வாஞ்சி அய்யர் சிங்காரவேலுவை அழைத்துக்கொண்டு போய்விட்டார். அவர்கள் சென்றதும் ஜகதீசய்யர், டாக்டர் குஞ்சிதபாதத்தைக் கூவி அழைத்து அவர் வந்ததும், அன்புடன் அவருடைய யோகக்ஷேமங்களை விசாரித்துவிட்டு, சிறித்துக்கொண்டே,

"தேடிப்போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டது." என்றார். வக்கீல் ஜகதீசய்யர் அடிக்கடி குற்றாலம் வருவதுண்டாகையால், அவருக்கு டாக்டர் குஞ்சிதபாதத்தை நன்றாய்த் தெரியும். அவர் அவ்விதம் கூறியதும், குஞ்சிதபாதம், வியப்புற்று ஆவலுடன்,

"என்ன விசேஷம்?" என்று வினவினார்.

ஜகதீசய்யர் :—என் நண்பர் வக்கீல் அனந்தராமய்யருக்கு தியாகராஜன் என்று ஒரு குமாரனுண்டென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

குஞ்சிதபாதம் :— நன்றாய்த் தெரியும்.

ஜகதீசய்யர் :—இப்பொழுது அவனுக்கு என்னைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. அவனை நான் என் குமாரனென்றே நினைத்துக்கொண்டிருக்கிறேன். கூடிய சீக்கிரம் நான் அவனுக்கு விவாஹம் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

குஞ்சிதபாதம் :—பேஷ்! நல்ல காரியம். பெண் யார்?

ஜகதீசய்யர்:—(சிறித்துக்கொண்டே) பெண்ணுக்காகத்தான் உம்மிடம் வரவேண்டுமென்று இருந்தேன். உம்முடைய தங்கை செல்லம்மாளை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். நீரும் அஷ்டஸஹஸ்ரமென்பது எனக்குத் தெரியுமாகையால்—

குஞ்சிதபாதம் :—(விசனத்துடன்) "அடாடா! அப்படியா சமாசாரம்? ஜகதீசய்யர்வாள்! தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் என் தங்கையை அவள் பார்த்து இஷ்டப்படும் வாலிபனுக்குத்தான் விவாஹம் செய்துகொடுப்பதென்று தீர்மானித்திருக்கிறேன். ஆகையால்—

ஜகதீசய்யர்:—நீர் அப்படிச் செய்வதுதான் நியாயம். ஆனால் செல்லம்மாள் என் நண்பனுடைய குமாரன் தியாகராஜனைப் பார்த்துவிட்டால், வேறு பையனை விவாஹம் செய்துகொள்ள சம்மதிக்கமாட்டாளென்பது நிச்சயம்.

குஞ்சிதபாதம்:—(மரியாதையுடன்) ஜகதீசய்யர்வாள்! நாம் இதைப்பற்றி மேலும் பேசுவதில் பிரயோஜனமில்லை. ஏனென்றால் என் தங்கை ஏற்கனவே ஒரு வாலிபனை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்பது எனக்கு நன்றாய்த் தெரியும்.



ஜகதீசய்யர்:—(ஆவலுடன்) அது யார்?

குஞ்சிதபாதம் :—அவனையும் உங்களுக்குத் தெரியும். அவன் முருக விலாஸில் தற்சமயம் குடியிருக்கும் உங்களுடைய நண்பரின் தமக்கை குமாரனாகிய கிருஷ்ணமூர்த்தியே தவிர வேறல்ல.

இதைக் கேட்டதும் ஜகதீசய்யர் கொஞ்சநேரம் பிரமித்து நின்றார். பிறகு,

"ஆமாம்; இது அந்த கிருஷ்ணமூர்த்திக்குத் தெரியுமோ?" என்று வினவ, குஞ்சிதபாதம்,

"தெரியாது. ஆனால் அவனும் என் தங்கையை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறானென்பது நிச்சயம்." என்றார்.

பிறகு, இருவரும் மேலும் அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது முருக விலாஸுக்குச் சென்ற வாஞ்சி அய்யரையும் சிங்காரவேலுவையும் கவனிப்போம். அவர்கள் அதற்குள் நுழைந்ததும் வாஞ்சி அய்யர், சிங்காரவேலுவை நோக்கி மறுபடியும் சிறித்துக்கொண்டே,

"தியாகராஜய்யர்வாள்! வாருங்கள். முதலில் இதில் குடியிருக்கும் கிருஷ்ணமூர்த்தி அய்யரைப் பார்த்துவிட்டு பிறகு மாடிக்குப் போகலாம்." என்றார்.

அவ்விருவரும் கிருஷ்ணமூர்த்தியின் அறைக்குள் நுழைந்தபொழுது அவ் வாலிபன், யதாப்பிரகாரம் "ஐயோ! அப்பா!" என்று அலறிக்கொண்டிருந்தான். உள்ளே நுழைந்த வாஞ்சி அய்யர், சிங்காரவேலுவைக் காண்பித்து,

"கிருஷ்ணமூர்த்தி அய்யர்வாள்! இவர்தான் இந்த பங்களாவின் சொந்தக்காரராகிய தியாகராஜய்யர்." என்று கூறவே, கிருஷ்ணமூர்த்தி, மெல்லத் தன் தலையைத் திருப்பி, சிங்காரவேலுவை ஒருதரம் ஏற இறங்கக் கவனித்துவிட்டு மரியாதையுடன்,

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்." என்றான். உடனே சிங்காரவேலு,

"நீர்தானே கிருஷ்ணமூர்த்தியென்பவர்? உமக்கு உடம்பு சரியாயில்லை என்று வாஞ்சி அய்யர் சொன்னாரே. இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று விசாரிக்கவே, கிருஷ்ணமூர்த்தி,

"இப்பொழுது கொஞ்சம் தேவலை. ஆனாலும் தாராளமாய் நடமாட முடியவில்லை. நீங்கள் பம்பாயில் இருக்கிறீர்களாமே? அங்கு உங்களுக்கு என்ன உத்தியோகம்?" என்று வினவினான். சிங்காரவேலு, அதைப்பற்றிப் பேசுவது அபாயத்திற்கிடமென்று நினைத்தவன்போல்,

"வயிற்றுப் பிழைப்புக்காக ஏதேனும் செய்யவேண்டுமே. சரி; உம்மை நான் மறுபடியும் பிறகு பார்க்கிறேன்.—" என்று மேலே பேசுமுன், சாரங்கபாணியும் பக்கிரிசாமியும் அவ்வறைக்குள் நுழைந்தனர். சாரங்கபாணியைக் கண்டதும், சிங்காரவேலு,

"ஹலோ! சாரங்கபாணி!" என்று குதூகலத்துடன் அழைக்கவே, சாரங்கபாணி, தான் அவனை சிறிதும் எதிர்பாராதவன்போல் அபிநயித்து,

"ஹோ ஹோ! மிஸ்டர் தியாகராஜன்! இதென்ன இது? எப்பொழுது நீங்கள் வந்தீர்கள்? பம்பாயில் நீங்கள் என்னிடம் மார்ச்சு மாதம்தான் வரப்போகிறேனென்று சொன்னீர்களே." என்றான். சிங்காரவேலு,

"வாஸ்தவம். ஆனால் பிறகு திடீரென்று நினைத்துக்கொண்டு புறப்பட்டு வந்துவிட்டேன். சரி; என்ன சமாசாரம்? உம்முடைய வேலை எந்தமட்டில் இருக்கிறது?" என்று வினவ, சாரங்கபாணி,

"அது இன்னும் 15 நாட்கள் பிடிக்கும்." என்று விடையளித்தான். பிறகு, சிங்காரவேலு, பக்கிரிசாமியை ஒருதரம் கவனித்துப் பாத்துவிட்டு, சாரங்கபாணியை நோக்கி,



18878

"சாரங்கபாணி! இவர் யார்?" என்று மரியாதையுடன் வினவ, சாரங்கபாணி,

"இவர் என்னுடைய சிநேகிதர். இவருடைய பெயர் சபாபதி பிள்ளை. இவ்வூரில் கொஞ்சம் நிலம் வாங்கும் பொருட்டு வந்திருக்கிறார்." என்று கூறவே, சிங்காரவேலு,

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்." என்று கூறிய வண்ணம், பக்கிரிசாமியின் கரங்களைப்பற்றிக் குலுக்கிவிட்டு, வாஞ்சி அய்யரை நோக்கி, "சரி; வாஞ்சி அய்யர்வாள்! மாடிக்குப் போகலாமா?" என்று வினவ, நம் குமாஸ்தா போகலாமென்று விடையளித்தார். உடனே எல்லோரும் மாடிக்குச் சென்றனர். மாடி ஹாலுக்குள் நுழைந்ததும், வாஞ்சி அய்யர், ஒருதரம் நாலாபக்கங்களையும் பாத்துவிட்டு தாழ்ந்த குரலில்,

"இந்த ஹாலை நானே சுத்தம் செய்யவேண்டியதாய் விட்டது. அக் கிழவன் முருகன் நடமாட்டமில்லாமல் கிடக்கிறான்." என்று கூறவே, சிங்காரவேலு, சிரித்துக்கொண்டே,

"அதனால் பாதகமில்லை. சரி; சாரங்கபாணி! நீ வெளியில் இரு. வக்கீல் ஜகதீசய்யர் வந்தால் சொல்." என்றான். உடனே சாரங்கபாணி வெளியே சென்று மாடிப்படிகளின் சமீபத்தில் நின்றுகொண்டதும், சிங்காரவேலு, மற்ற இருவர்களையும் நோக்கி, "வாருங்கள் உட்கார்ந்துகொண்டு பேசுவோம்." என்று கூறியவண்ணம், தயாராய்ப் போட்டிருந்த பல நாற்காலிகளில் ஒன்றில் உட்கார்ந்துகொண்டான். உடனே மற்ற இருவரும் அமர்ந்துகொண்டனர். நிற்க, அதுவரையில் தன் வாயைத் திறக்காமலிருந்த பக்கிரிசாமி, நம் குமாஸ்தாவை நோக்கி,

"ஐயரே! நான் சொன்னபொழுது இது எப்படிமுடியுமென்று கேட்டீரே. இப்பொழுது உமக்கு என்ன தோன்றுகிறது?" என்று வினவ, வாஞ்சி அய்யர்,

எனக்கு என்னமோ பயமாகத்தான் இருக்கிறது." என்றார். இதைக் கேட்டதும் சிங்காரவேலு,

"பிராமணனுக்கு தைரியம் எங்கிருந்து வரும்?" என்று கூறிவிட்டு கலகலவென்று நகைக்கலானான். உடனே பக்கிரிசாமி, வாஞ்சி அய்யரை நோக்கி,

"என்காணும்! உமக்கென்ன பயம்? உம்மிடம்தான் அக் கடிதங்கள் இருக்கின்றனவே. என் ஐயரே! அக் கடிதங்களை நீர்—" என்று மேலே பேசுமுன் வாஞ்சி அய்யர், திடீரென்று,

"அடாடா! மறந்தேபோய்விட்டேனே. இருங்கள்; இதோ வந்துவிட்டேன்." என்று கூறியவண்ணம் எழுந்து கீழே ஓடினார். பிறகு வெளியே வந்ததும், அந்த பங்களாவின் இடதுகைப்பக்கத்திலிருந்த ஒரு அழகிய புஷ்பத்தோட்டத்திற்குள் நுழைந்து, தன் சட்டைப் பையிலிருந்து சில கடிதங்களை எடுத்து, அவைகளைத் தன் கைக்குட்டையில் வைத்து ஒரு சிறிய மூட்டையாய்க் கட்டியவண்ணம், "சரி; இப்பொழுது இவைகள் என்னிடம் இருப்பது பிசகு. ஒருக்கால் இந்தப் பயல்கள் இவைகளை என்னிடமிருந்து பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொள்ளக்கூடும். ஆகையால் இவைகளை நான் எங்கேயாவது ஜாக்கிரதையாய் ஒளித்துவைத்துவிடவேண்டும்." என்று தீர்மானித்தவராய், ஒருதரம் நாலபக்கங்களையும் கவனித்தார். நடுவில் அவருடைய பார்வை பக்கத்தில் வரிசை வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சில காலி பூச் சட்டிகளின்மீது விழவே, "பேஷ்! இதுதான் நல்ல யோசனை." என்று நினைத்தவர்போல் அச் சட்டிகளை நோக்கி நடந்தார். பிறகு தன்னை யாராவது கவனிக்கிறார்களாவென்று பார்ப்பவர்போல் ஒருதரம் மறுபடியும் நாலாபக்கங்களையும் கவனித்துவிட்டு, அக் கடித மூட்டையை அச் சட்டிகளில் ஒன்றில் வைத்து, அதைக் கவிழ்த்துவைத்துவிட்டு, அவ்விடத்தை விட்டு எழுந்து துரிதமாய் நடந்தார். ஆனால் கொஞ்சதூரம் சென்றதும் அவர் திரும்பிப் பார்க்கவே திடுக்கிட்டவராய் சிலைபோல் நின்றார். ஏனெனில், அச்சமயம் ஒருவன் அப் பூச் சட்டிகளின் சமீபத்தில் மண்டிபோட்டுட்கார்ந்தவண்ணம் அவைகளை ஒவ்வொன்றாய்த் தூக்கிப் பார்த்துக்கொண்டிருந்



தான். இதைக் கண்டதும் வாஞ்சி அய்யர் நாம் சொன்னதுபோல் கொஞ்சநேரம் திகைப்புற்று ஸ்தம்பித்து நின்றுவிட்டு அவனை நோக்கி ஓடினார். ஆனால் அவர் வந்து தன்னைப் பிடிக்குமுன், அவ்விதம் அப் பூச் சட்டிகளைத் தூக்கிப் பார்த்துக்கொண்டிருந்தவன், அக் கடித மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு, எழுந்து நின்று, அம் மூட்டையை ஆவலுடன் அவிழ்க்கவாரம்பித்தான். அது நம் கிருஷ்ணமூர்த்தியேயொழிய வேறல்ல. அவனைப் பார்த்ததும் வாஞ்சி அய்யர், மனம் பதற, பேசமுடியாமல் திணறியவண்ணம்,

"கிருஷ்ண-மூ-ர்-த்-தி!—" என்று மேலே பேசுமுன் அவ் வாலிபன் அம்மூட்டையை அவசரத்துடன் அவிழ்த்து அதிலிருந்த கடிதங்களை ஒருதரம் ஆவலுடன் கவனித்தான். பிறகு, 'அப்பாடா!' என்று ஒருதரம் பெருமூச்செறிந்துவிட்டு, வாஞ்சி அய்யரை நோக்கி, தன் சுபாவ புன்சிறிப்புடன்,

"ஸ்வாமி! இனிமேல் தயவுசெய்து என்னை கிருஷ்ணமூர்த்தி என்று அழைக்கவேண்டாம். என்னுடைய வாஸ்தவமான பெயர் அதல்ல." என்றான்.

இதைக் கேட்டதும், வாஞ்சி அய்யர், அவனை ஒருதரம் கலவரத்துடன் நோக்கிவிட்டு,

"ஆனால் உன்னுடைய வாஸ்தவப் பெயர் என்ன? நீ யார்?" என்று வினவ அவ் வாலிபன், வியக்கத்தக்க அமைதியுடன்,

"ஸ்வாமி! நான் நீங்கள் எல்லோரும் இப்பொழுது பம்பாயில் இருப்பதாக நினைத்துக்கொண்டிருக்கும் வக்கீல் அனந்தராமய்யருடைய இரண்டாவது குமாரன் தியாகராஜன்." என்றான்.

## அத்தியாயம் 14.

"நான் தியாகராஜன்" என்று அவ் வாலிபன் கூறியதும், கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்த நம் வாஞ்சி அய்

யருக்கு அவர் ஓர் சமயம் பக்கிரிசாமியிடம் கூறியதுபோல் தன் சுவாஸம் அப்படியே நின்றுவிடும்போலிருந்தது. உடனே அவர், கால்கள் சோர்வுற்று, நிற்கவும் முடியாமல் அப்படியே தரையில் உட்கார்ந்துவிட்டார். நிற்க அவ்வாலிபன், (இனி நாம் அவனை தியாகராஜன் என்றே அழைப்போம்) வாஞ்சி அய்யரை நோக்கி,

“ஸ்வாமி! பிராமணனாய்ப் பிறந்த நீர் இவ்விதம் உம்மை அடியுடன் நம்பிய உம்முடைய எஜமானரை மோசம் செய்தது மகா பாபம். ஐயா! இப்பொழுது உம்முடைய முகத்தைப் பார்த்தால் ‘ நான் தியாகராஜன் ’ என்று நான் சொல்வதை நீர் நம்பாதவர்போல் தோன்றுகிறது. நான் ஏன் இவ்விதம் இரஹஸ்யமாய் வந்தேனென்பதையும் இன்னும் மாறுபெயருடன் என்னுடைய பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டேன் என்பதையும் சொல்லுகிறேன் கேளும்.

போனவருஷம் என்னைப் பார்க்கும்பொருட்டு என் தந்தை பம்பாய்க்கு வந்தது உமக்கும் தெரிந்திருக்கலாம். அப்பொழுது அவர், இக் கடிதங்களைப்பற்றி என்னிடம் விபரமாயக் கூறியதுமன்றி, இவைகளில் கூறப்பட்டிருக்கும் அந் நகைகள் இந்த பங்களாவின் மாடி ஹாலில் ஒரு பீரோவில் இருப்பதாகவும் கூறவே, நான் அவ்வளவு விலையுயர்ந்த நகைகள் காலியாய்க் கிடக்கும் ஒரு வீட்டில் (அதுவும் சாதாரணமான ஒரு பீரோவில்) இருப்பது பிசகென்றும் அவைகளை அவர் எடுத்துவந்து தன்னிடமே வைத்துக்கொள்வது உசிதமென்றும் சொன்னேன். என் தந்தை, முடியுமானால் அப்படியே செய்வதாகவும், தான் அப்படிச் செய்யும்பக்ஷத்தில் அதை எனக்குத் தெரிவிப்பதாகவும் கூறினார். ஆனால் கடைசிவரையில் அவர் அதைப்பற்றி எனக்கு எழுதவேயில்லை. ஆகையால் அவர் இறக்குமுன் சில கடிதங்களை ஒரு உரையில் வைத்து அதைத் தன்னிடம் கொடுத்தாரென்று ஜகதீசய்யர் பிறகு எனக்கு எழுதியதும், தான் இறந்துவிடுவோமென்பதை எதிர்பார்த்து அவ்வளவு தூரம் செய்தவர் அந் நகைகளிருக்கும் இடத்தையும்



எனக்குத் தெரிவிக்காமல் இருந்திருக்கமுடியாதென்று தீர்மானித்து, அதைப்பற்றி அதே உரையில் எனக்கும் ஒரு கடிதம் எழுதிவைத்திருப்பாரென்று அனுமானித்தேன். அப்படியே அவர் அந் நகைகளை இன்னும் இதே பங்களாவில் வைத்திருந்தபோதிலும் அவைகள் தான் என்னிடம் சொன்ன இடத்திலேயே இன்னும் இருக்கின்றன என்றாவது எழுதிவைத்திருப்பாரென்று எதிர்பார்த்தேன். நான் நினைத்தபடியே இதோ அவர் இக் கடிதத்தில் அந் நகைகளின் சொந்தக்காரர் இப்பொழுது இருக்கும் இடத்தையும், அந் நகைகள் இதே பங்களாவின் மாடி ஹாலில் இன்னும் இருப்பதாகவும் எழுதிவைத்திருக்கிறார். ஆகவே, அக் கடிதங்கள் களவுபோய்விட்டன என்ற விஷயத்தை ஜகதீசய்யர் எனக்குக் கொடுத்த தந்தியிலிருந்து நான் தெரிந்துகொண்டதும் அவைகளைத் திருடியவன் அவைகளைக் கண்டிப்பாய்ப் பிரித்து வாசிப்பானென்றும், வாசித்ததும் அந் நகைகள் இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டுவிடுவானென்றும், தெரிந்துகொண்டதும் உடனே அவைகளையும் களவாடத் தீர்மானிப்பானென்றும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆகையால் நானும் உடனே புறப்பட்டு இங்கு வரத் தீர்மானித்தேன். ஆனால் நான் வருகிறேனென்பது ஒருவருக்கும் தெரியாமலிருப்பதே உசிதமென்று நினைத்தும், முடியுமானால் இக் கடிதங்களைத் திருடியவனை ஏமாற்றும்பொருட்டும், நான் இப்பொழுது வரவில்லையென்றும், இக் கடிதங்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், இன்னும் நானே ஒருக்கால் ஒரு அந்நியனைப்போல் இந்த பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படலாமென்பதை எதிர்பார்த்து, இதை வாடகைக்கு சீக்கிரம் விடுமாறும் ஒரு கடிதத்தை எழுதிவிட்டு, அதே தினம் இரவு மெயிலில் புறப்பட்டு 15உ மாலை மாயவரம் வந்துசேர்ந்தேன். மாயவரம் வக்கீல் பாலசுப்பிரமணியய்யரும் என் தந்தையின் முக்கிய நண்பர்களில் ஒருவரென்பது எனக்குத் தெரியும். இன்னும், போன வருஷம் அவர் பம்பாய்க்கு ஒரு கார்யமாக வந்திருந்த

பொழுது என் அறையில் என்னுடன் சில தினங்கள் இருந்தார். ஆகவே, எனக்கு அவரை வக்கீல் ஜகதீசய்யரைக் காட்டிலும் நன்றாய்த் தெரியும். ஆகையால், நான் மாயவரம் வந்துசேர்ந்ததும், முதலில் அவருடைய வீட்டிற்குச் சென்றேன். வக்கீல் ஜகதீசய்யருடைய வீட்டிலிருந்து இக் கடிதங்கள் களவுபோன விஷயத்தை அறிந்ததுமே, அவருடன் நெருங்கிப் பழகும் ஒருவன் இக் கடிதங்களைத் திருடியவனுக்கு உட்கையாய் இருந்திருக்கவேண்டுமென்று நான் சந்தேகித்ததால், நான் அவருடைய வீட்டிற்குப் போகும்பக்ஷத்தில் நான் வாஸ்தவத்தில் யாரென்பதும், நான் இப் பக்கம் வந்ததின் காரணமும் ஒருக்கால் அத்திருடனுக்குத் தெரிந்துவிடக்கூடுமென்று பயந்து, நான் சொன்னதுபோல் முதலில் பாலசுப்பிரமணியய்யருடைய வீட்டிற்குப் போனேன். ஆனால் நான் அவருடைய வீட்டிற்குப் போனதும், ஜகதீசய்யரையும் அங்கு வரவழைத்தோம்.

என் தந்தை இறந்ததும், அவருடைய சாமான்களையெல்லாம் வக்கீல் ஜகதீசய்யர் எடுத்துவந்து தன் வீட்டில் வைத்துக்கொண்டது உமக்கும் தெரிந்திருக்கும். ஆகையால் நான் வந்ததும் ஒருக்கால் என் தந்தை ஏற்கனவே அந் நகைகளை இங்கிருந்து எடுத்துச்சென்று தன்னிடம் வைத்துக்கொண்டிருந்திருக்கலாமென்று நினைத்து, நாங்கள் அவருடைய பெட்டிகள் எல்லாவற்றிலும் நன்றாய்த் தேடிப் பார்த்தும், அந் நகைகள் எங்களிடம் அகப்படாததால் அவைகள் இன்னும் முருக விலாஸில்தான் இருக்கவேண்டுமென்று தீர்மானித்தோம். இன்னும், ஒருக்கால் இக் கடிதங்களைத் திருடியவன் அவைகள் இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு அவைகளை ஏற்கனவே களவாடியிருப்பானென்றும் நாங்கள் பயந்ததுண்டு. ஆனால் அச்சமயம் நாங்கள் வேறு எதையும் செய்யமுடியவில்லை. பிறகு, இப் பங்களாவை நான் ஒரு அந்நியனைப்போல் வாடகைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவே, பாலசுப்பிரமணியய்யர் தனக்கு கிருஷ்ணமூர்த்தி என்ற ஒரு



மருமான் இருப்பதாகவும், நான் அப் பெயரை வைத்துக்கொண்டு இதை எடுத்துக்கொள்ளலாமென்றும், அதற்கு தான் சிபார்சு செய்வதாகவும் கூறினார். ஆனால் மறுதினம் வரக்கூடிய என் கடிதம் ஜகதீசய்யருக்குக் கிடைக்கும் வரையில் நாங்கள் அப் பேச்சை எடுப்பது பிசகென்று நினைத்து மறுநாட் காலைவரையில் சும்மாயிருந்துவிட்டோம்.

நிற்க, நான் வந்ததும், என் தந்தை உயிருடனிருந்த பொழுது அவரிடமிருந்த வேலைக்காரர்களைப்பற்றியும் வக்கீல் ஜகதீசய்யருடன் நெருங்கிப் பழகுகிறர்வர்களைப்பற்றியும் விசாரித்ததிலிருந்து, என் தந்தை இறந்தபொழுது சிங்காரவேலு என்று ஒருவன் அவரிடம் வேலைக்காரனாயிருந்தானென்றும், ஜகதீசய்யரிடம் குமாஸ்தாவாயிருக்கும் நீர் மகா நீச சுபாவமுள்ளவரென்றும், பணத்தின்பொருட்டு எதையும் செய்யக்கூடியவரென்றும், எல்லாம்போக, ஜகதீசய்யருக்கு உம்மிடம் மிகவும் நம்பிக்கை உண்டாகையால் அவருக்கு வரும் கடிதங்களை எல்லாம் நீரே முதலில் உடைத்துப் பார்ப்பது வழக்கமென்றும் தெரிந்துகொள்ளவே, நான் உடனே உம்மை சந்தேகிக்கலானேன். நான் பம்பாயிலிருந்து எழுதிய கடிதம் மறுநாட் காலை மாயவரம் வந்துசேருமென்று எனக்குத் தெரியுமாகையால் அதை நீர் என்ன செய்கிறீரென்று பார்க்கும்பொருட்டு, மறுநாட் காலை ஜகதீசய்யருடைய வீட்டின் சமீபத்தில் ஒரு மறைவில் நின்றுகொண்டு, வக்கீல் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்த உம்மை கவனித்துக்கொண்டிருந்தேன். சற்று நேரத்திற்கெல்லாம் தபாற்காரன் வந்து உம்மிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதைப் பார்த்ததுமே அது என்னுடையதுதான் என்பதை நான் அறிந்துகொண்டேன். அதை நீர் உடைத்துப் பார்த்ததுமன்றி, உடனே கொண்டுபோய் அதை ஜகதீசய்யரிடம் காண்பிக்காமல், அச்சமயம் உம்மிடம் வந்த ஒருவனை அழைத்துக்கொண்டு உம்முடைய வீட்டிற்குப் போனீர். அவ்விதம் அன்று உம்மிடம் வந்தவன் என் தமயனை அநியாயமாய் ஏமாற்றிக் கெடுத்த அச் சண்டாளன் பக்கிரிசாமியே என்பது எனக்கு

இப்பொழுது தெரியும். ஆகவே, எனக்கு உம்மீது ஏற்பட்ட சந்தேகம் அதிகரித்தது. பிறகு நீர் மறுபடியும் அக் கடிதத்துடன் திரும்பிவந்து, இதற்குள் தன் வீட்டுத் திண்ணைக்கு வந்து அங்கிருந்த சில கக்ஷிக்காரர்களுடன் பேசிக்கொண்டிருந்த, வக்கீல் ஜகதீசய்யருடன் பேசவாரம்பித்தீர். ஜகதீசய்யர் பம்பாயிலிருந்து கடிதம் வரவில்லையாவென்று உம்மைக் கேட்டது என் செவிகளிலும் பட்டதால் நான் உடனே பாலசுப்பிரமணியய்யருடைய வீட்டிற்குப் போய்விட்டேன். சற்று நேரத்திற்கெல்லாம் நீரே வந்து என்னை ஜகதீசய்யருடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனீர். உம்மீது எனக்கு ஆதியிலிருந்தே சந்தேகம் ஏற்பட்டுவிட்டதால், வாஸ்தவத்தில் நான் யாரென்பது உமக்குத் தெரியக்கூடாதென்று நான் அவரிடம் சொல்லியிருந்ததால்,ஜகதீசய்யர் அன்று உம் எதிரில் அவ்விதம் பாசாங்கு செய்தார். பிறகு நான் அதே தினம் மாலை குற்றாலம் வரத் தீர்மானித்தேன். ஏனெனில், என்னை அந் நகைகளைப் பற்றிய கவலை இன்னும் அல்லற்படுத்திக்கொண்டிருந்தது. ஆனால் அன்று பிற்பகல் சுமார் 3 மணிக்கு சாரங்கபாணி நான் பம்பாயிலிருந்து எழுதிக் கொடுத்ததுபோல் ஒரு கடிதத்தை எடுத்துக்கொண்டு வக்கீல் ஜகதீசய்யரிடம் வரவே, எனக்குண்டான சந்தோஷம் அளவற்றது. அதிலிருந்து அந் நகைகள் இன்னும் முருக விலாஸ் மாடியில் இருக்க வேண்டுமென்றும் அவைகளை நீங்கள் இன்னும் களவாடவில்லையென்றும் தெரிந்துகொண்டேன். உடனே நான் அன்று மாலை குற்றாலம் வரவேண்டியது அனாவசியமென்று நினைத்து, மறுதினம் மாலை வரத் தீர்மானித்தேன். ஆனால் நான் வருமுன் சாரங்கபாணி இங்கு வராமலிருக்க ஏற்பாடு செய்துவிட்டேன். சில தினங்களுக்குமுன் இந்த சாரங்கபாணி பக்கிரிசாமியை என்னிடம் அழைத்துக்கொண்டு வந்தான். ஆனால் அப்பொழுதும் அவனுடைய வாஸ்தவப் பெயர் பக்கிரிசாமியென்பது எனக்குத் தெரியாது. அவன் போனபிறகுதான் இவ்வூர் டாக்டர் சொல்லி எனக்குத் தெரியும். அவன் என் தமயனுடைய நண்பன் பக்-



கிரிசாமி என்று வெளியானதும், இக் கடிதங்கள் திருட்டுப் போனதற்குக் காரணமென்னவென்பதை சந்தேகமின்றி தெரிந்துகொண்டேன். இன்னும் நீர் நான் பம்பாயிலிருந்து எழுதிய கடிதத்துடன் அவனை உம்முடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனது எனக்கு உடனே ஞாபகம் வரவே, நீர் அத் திருடர்களுக்கு உட்கை என்பதையும் சந்தேகமறத் தெரிந்துகொண்டேன்.

கடைசியில் நீங்கள் திருட்டுத்தனமாய் இந்த பங்களாவிற்குள் நுழைந்து அந் நகைகளைத் தேடி எடுப்பது கஷ்டமென்று நினைத்து உங்களில் ஒருவனையே அவன்தான் தியாகராஜன் என்று ஜகதீசய்யரிடம் அனுப்பத் தீர்மானித்தீர்கள். நேற்று மாலை உங்களுடைய நண்பன் என்னைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு வந்ததும், வக்கீல் ஜகதீசய்யர் தான் அவனை வாஸ்தவத்தில் தியாகராஜனென்று நம்பியவர்போல் பாசாங்கு செய்தாரேயொழிய உங்களுடைய சூழ்ச்சியை அவர் அறியாதவர் அல்ல. அவர் உடனே ஒரு கடிதத்துடன் வக்கீல் பாலசுப்பிரமணியய்யருடைய குமாரன் முத்துஸ்வாமியை என்னிடம் அனுப்பினார். முத்துஸ்வாமி வந்தது உமக்கே தெரியும். ஜகதீசய்யர் அக் கடிதத்தில் தான் என்னைப்போல் வேஷம் போட்டுக்கொண்டிருந்தவனை அழைத்துக்கொண்டு இன்று காலமே இங்கு வருவதாக எழுதியிருந்ததால் நான் தயாராயிருந்தேன். ஸ்வாமி! இப்பொழுது மாடியில் நீங்கள் சாரங்கபாணியைக் காவல் வைத்திருக்கிறீர்கள். ஆனால் பாலசுப்பிரமணியய்யருடைய குமாரன் முத்துஸ்வாமி அந்த ஹாலின் இடது கைப்பக்கத்திலிக்கும் ஒரு அறையில் ஒளிந்துகொண்டிருக்கிறான். இப்பொழுது மேலே உம்முடைய நண்பர்கள் பேசிக்கொண்டிருப்பதையும் செய்வதையும் அவன் கவனித்துக்கொண்டிருப்பான். நிற்க, சற்றுநேரத்திற்குமுன் நீர் கீழே ஓடிவந்ததும் அதைப் பார்த்துக்கொண்டிருந்த நான் வியப்புற்று நீர் எங்கே போகிறீர் என்று கவனித்ததின் பலனாய் இதோ இக் கடிதங்கள் அகப்பட்டன. சரி; இப்பொழுது நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று வினவினான்.

நிற்க, நாம் சொன்னதுபோல் நிற்கவும் சக்தியற்று தரையில் உட்கார்ந்துகொண்டிருந்த நம் குமாஸ்தா அச்சமயம் அனுபவித்த பீதியையும் கவலையையும் வர்ணிப்பதுமுடியாத காரியம். "இப்பொழுது நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று தியாகராஜன் வினவியதும்,கும்பகோணத்தில் பிறந்து வளர்ந்த அப் பிராமணன், சிரமத்துடன் எழுந்து, அவ் வாலிபனை உற்றுநோக்கியவண்ணம் நின்றார். பிறகு திடீரென்று தரையில் விழுந்து தியாகராஜனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு,

" அப்பா! தெரியாமல் செய்துவிட்டேன். என்னைக் காப்பாற்று." என்று கெஞ்சினார். அவ் வாலிபன், அவரை மெள்ளத் தூக்கி நிறுத்தி,

" ஸ்வாமி! உம்மைக் காப்பாற்றாமல், போலீஸாரிடம் ஒப்புவித்து, தண்டனைக்குள்ளாக்குவதில் எனக்கு ஒன்றும் லாபமில்லை. ஆனால் இனியாகிலும் புத்தியாய்ப் பிழையும். அநியாயமாய் பிராமண ஜாதியின் பெயரை மேலும் கெடுக்காதேயும். சரி; வாரும். போய் உம்முடைய நண்பர்களைப் பார்ப்போம்." என்று கூறியவண்ணம் அவ்விடத்தைவிட்டுச் செல்லவே, வாஞ்சி அய்யரும் அவனுடன் சென்றார். கொஞ்சதூரம் சென்றதும் தியாகராஜன் தன் கையிலிருந்த கடிதங்களை மறுபடியும் ஒருதரம் நன்றாய்க் கவனித்துவிட்டு, பக்கிரிசாமியும் ராமுவும எழுதிய கடிதங்களைத் தவிர மேலும் சில கடிதங்கள் இருந்ததைப் பார்த்ததும், வியப்புற்று,

" இதென்ன கடிதங்கள்?" என்று வினவினான். வாஞ்சி அய்யர் அவைகள் யாருடையது என்று எடுத்துச் சொல்லவே, அவைகளைக் கையில் வைத்துக்கொண்டு,பாக்கி இரண்டு கடிதங்களையும் தன் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டான்.

இதற்குள் அவ்விருவரும் முருகவிலாஸின் முன் பக்கத்திற்கு வந்துவிட்டார்கள். அதே சமயம், வக்கீல் ஜகதீசய்யரும்,டாக்டர் குஞ்சிதபாதமும் அங்கு வந்துசேரவே, தியாகராஜன், வாஞ்சி அய்யரை நோக்கி,



" ஸ்வாமி! நீர் மாடிக்குப் போம். நாங்கள் இதோ வந்துவிட்டோம்." என்று கூறவே, நம் குமாஸ்தா உள்ளே சென்றார்.

நிற்க, தியாகராஜனைக் கண்டதும்,வக்கீல் ஜகதீசய்யர், ஆவலுடன்,

"அப்பா! என்ன சமாசாரம்?" என்று வினவ, அவ் வாலிபன் நடந்ததை சுருக்கமாய்ச் சொல்லி முடித்ததும், " சரி; இக் கடிதங்களை நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று வினவினார். தியாகராஜன்,

" செய்வதென்ன? உடனே எரித்துவிடவேண்டும். என் தந்தை எதற்காக இப்பேர்ப்பட்ட கடிதங்களை இதுவரையில் வைத்துக் காப்பாற்றினாரென்பது எனக்கு விளங்கவில்லை." என்று விடையளிக்கவே, ஜகதீசய்யர்,

" சரி. அந்த நகைகள் எங்கே?" என்று வினவினார். அவ் வாலிபன்,

" அதுதான் இன்னும் தெரியவில்லை. நான் மாடியில் தேடாத இடம் பாக்கி கிடையாது. அவைகளை இவர்களும் எடுக்கவில்லை என்பது நிச்சயம்." என்றான். இதைக் கேட்டதும் ஜகதீசய்யர், வியப்புற்று,

" என்ன ஆச்சர்யம்? அப்படியானால் அவைகள் எங்கே போய்விடும்?" என்று வினவ, தியாகராஜன்,

" அதென்ன மாயமோ? ஆனால் அவைகளைப்பற்றி நான் மிகவும் கவலைப்படவில்லை. என் கவலைக்குக் காரணம் இக் கடிதங்களே. சரி; வாருங்கள். மாடிக்குப்போய் நான் கீழே இருந்த சமயத்தில் ஒருக்கால் அந் நகைகள் அவர்களிடம் அகப்பட்டனவோ என்று பார்ப்போம்." என்றான்.

அம் மூவரும் மாடிக்குச் சென்றபொழுது, பக்கிரிசாமி சிங்காரவேலு, சாரங்கபாணி, வாஞ்சி அய்யர் இந்நால்வரும்

திகைப்புற்று இன்னது செய்வதென்று புரியாமல் நின்றுகொண்டிருந்தனர். நிற்க, உள்ளே நுழைந்த தியாகராஜன், அவர்களை ஒருதரம் ஏற இறங்கக் கவனித்துவிட்டு, அவர்கள் தன்னை எதிர்க்கமாட்டார்கள் என்று நம்பியவன்போல் முன் சென்று, அந்த ஹாலின் இடதுகைப்பக்கத்திலிருந்த அறையை நோக்கி,

“முத்துஸ்வாமி! இதுவரையில் இவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? இந்த ஹாலில் இருக்கும் பீரோக்களையாவது அலமாரிகளையாவது திறந்து ஏதேனும் செய்தார்களா?” என்று வினவ, அவ்வறைக்குள் நின்றுகொண்டு, அதன் கதவிலிருந்த ஒரு சந்தின் வழியாய் அந்த ஹாலைக் கவனித்துக்கொண்டிருந்த முத்துஸ்வாமி,

“அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்களே யொழிய பீரோக்களையாவது அலமாரிகளையாவது திறக்கவில்லை.” என்று விடையளிக்கவே, தியாகராஜன் தன் கையிலிருந்த கடிதங்களை சாரங்கபாணியின் முகத்தை நோக்கி எறிந்துவிட்டு,

“சரி; நீங்கள் எல்லோரும் உடனே மரியாதையாய் வெளியில் போய்விடுங்கள்.” என்று கூறவே, சாரங்கபாணி அக் கடிதங்களைப் பொருக்கி எடுத்துக்கொண்டதும் எல்லோரும் பிழைத்தது புனர்ஜன்மம் என்று நினைத்தவர்கள்போல் அந்த ஹாலை விட்டு வெளியே ஓடினார்கள்.

அவர்கள் சென்றதும் தியாகராஜன் முத்துஸ்வாமி இருந்த அறையின் கதவைத் திறக்கவே, அவ் வாலிபன் சிரித்துக்கொண்டே வெளியே ஓடிவந்தான். பிறகு வக்கீல் ஜகதீசய்யர், மறுபடியும்,

“தியாகராஜா! அந் நகைகள் எங்கே போயிருக்கும்?” என்று வினவ, தியாகராஜன்,

“என் தந்தை இந்த ஹாலில்தான் இருக்கின்றன என்று எழுதியிருக்கிறார். ஒருக்கால் வேறு யாராவது, ஏற்கனவே அவைகள் இங்கிருந்ததைத் தெரிந்துகொண்டு,



இவ் வீட்டிற்குள் நுழைந்து அவைகளைக் களவாடிக்கொண்டு போயிருக்கலாம். இருக்கட்டும்; முருகனை சாவகாசமாய் விசாரிப்போம்.” என்றான். உடனே ஜகதீசய்யர்,

“ஆமாம்; அன்று உன்னைக் கல்லால் அடித்தது யாரென்பது இன்னும் வெளியாகவில்லையே. ஒருக்கால் இவர்களில் ஒருவனே, உன்னால் தங்களுக்கு கஷ்டமில்லாமலிருக்கும் பொருட்டு, அன்று மாடியில் ஒளிந்துகொண்டிருந்து உன்னை அடித்திருப்பானோ?” என்று வினவ, தியாகராஜன், புன்சிரிப்புடன்,

“இருக்கலாம். நான் அவர்களைக் கேட்க மறந்துவிட்டேன். ஆனால் அதைத் தெரிந்துகொள்ளுவதில் என்ன லாபம்? அடித்ததில் யார் அடித்தால் சிரேஷ்டம்?” என்று கூறியவண்ணம், திரும்பி, அதுவரையில் தன் வாயைத் திறக்காமல் நின்றுகொண்டிருந்த டாக்டர் குஞ்சிதபாதத்தை நோக்கி. மரியாதையுடன்,

“டாக்டர்வாள்! இக் காரியத்தில் நீங்களும் உங்களுடைய தங்கையும் எனக்குச் செய்த உதவியை—” என்று மேலே பேசுமுன் குஞ்சிதபாதம், புன்முறுவல் செய்தவண்ணம்,

“அதிருக்கட்டும். அன்று வாஸ்தவத்தில் நடந்தது என்ன சொல்லும். நீர், மாடியிலிருந்து கீழே வந்து கடைசிப் படியின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்தபொழுது ஒருவன் உம்மைக் கல்லால் அடித்தானென்று சொன்னீர். அன்று நீர் எதற்காக மாடிக்குப் போனீர்?” என்று வினவினார். தியாகராஜன்,

“இவ் வீட்டின் மாடியில் சில நகைகள் இருக்குமென்று நான் எதிர்பார்த்தேனென்பது உமக்கே தெரியும். நான் இந்த பங்களாவுக்கு வந்துசேர்ந்த அதே தினம் இரவு மாடிக்கு வந்து இங்கிருக்கும் சில பீரோக்களில் தேடிப் பார்த்தேன். ஆனால் அந் நகைகள் அகப்படவில்லை. பிறகு மிகவும் சிரமமாயிருந்ததால், மறுதினம் மேலும் தேடலா

மென்று நினைத்து, இந்த ஹாலை மறுபடியும் பூட்டிக்கொண்டு, கீழே சென்று படுத்துக்கொண்டேன். ஆனால் மறு நாள் பகல் முழுமையும் நான் மாடிப்பக்கம் போகமுடியவில்லை. ஏனென்றால் அக் கிழவன் முருகன், கீழே மாடிப்படிகளின் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு, அன்று பகல் முழுமையும் என்னமோ வேலைசெய்துகொண்டிருந்தான். பிறகு மாலை 6½ மணி சுமாருக்கு, அவன் வெளியில் செல்லவே, நான் மாடிக்கு வந்து இந்த ஹாலைத் திறந்துகொண்டிருக்கையில், கீழே வாசற்கதவை உட்பக்கம் தாளிட மறந்துவிட்டேனென்பது ஞாபகம் வரவே, நான் உள்ளே தேடிக்கொண்டிருக்கையில் ஒருக்கால் அக் கிழவன் மறுபடியும் வந்து நான் செய்வதைப் பார்த்துவிடுவானென்று பயந்து, வாசற்கதவைத் தாளிட்டுக்கொண்டு வரும்பொருட்டு கீழே இறங்கிக்கொண்டிருக்கையில்—" என்று மேலே பேசுமுன் டாக்டர் குஞ்சிதபாதம், மறுபடியும் அவனைத் தடுத்து சிறித்துக்கொண்டே,

"தியாகராஜய்யர்வாள்! ஆகவே நீர் என்னிடம் இரண்டு விஷயங்களில் பொய் சொல்லியிருக்கிறீர். ஸ்வாமி! புளுகுகிறவர்களைக் கண்டால் என் தங்கைக்குப் பிடிக்காது." என்றார்.

இதைக் கேட்டதும் தியாகராஜன் வியப்புற்று வக்கீல் ஜகதீசய்யரை ஆவலுடன் நோக்கவே, ஜகதீசய்யர், அளவற்ற பிரியத்துடன், அவ் வாலிபனை அணைந்துகொண்டு,

"அப்பா! நீ வாஸ்தவத்தில் யாரென்பதை நான்தான் இவரிடம் சொன்னவன். ஏனென்றால் இவருடைய தங்கையை கூடியசீக்கிரம் உனக்கு விவாஹம் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறேன்." என்றார்.

இதைக் கேட்டதும் தியாகராஜன் ஆனந்த சாகரத்தில் மூழ்கினான்.

---



## அத்தியாயம் 15.

அதே தினம் மாலை சுமார் 5 மணி இருக்கும்.

அச்சமயம் முருக விலாஸின் தோட்டக்காரன் முருகன் தன் வீட்டில் பலஹீனத்தினால் முனகியவண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்தான். சற்று நேரத்திற்கெல்லாம் வக்கீல் ஜகதீசய்யர், டாக்டர் குஞ்சிதபாதம், தியாகராஜன், இம் மூவரும் அவ் வீட்டிற்குள் நுழையவே, அக் கிழவன், சிரமத்துடன் எழுந்து நின்றுகொண்டு, மரியாதையுடன் நமஸ்கரித்தவண்ணம் ஜகதீசய்யரை நோக்கி,

"ஸ்வாமி! நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்? எனக்குத் தெரியாதே." என்றான். ஜகதீசய்யர்,

"நான் இன்று மத்தியானம் வந்தேன். இப்பொழுது தான் டாக்டர் நீ நடமாட்டமில்லாமல் இருப்பதாகச் சொன்னார். உடனே உன்னைப் பார்க்கலாமென்று வந்தேன்." என்று கூறவே, அக் கிழவன் திரும்பி டாக்டர் குஞ்சிதபாதத்தையும் நமஸ்கரித்தான். ஆனால் தியாகராஜனை நமஸ்கரிக்காமல் ஒருதரம் வெறுப்புடன் அவ் வாலிபனை நோக்கிவிட்டு தன் முகத்தைத் திருப்பிக்கொள்ளவே, ஜகதீசய்யர் வியப்புற்று, "முருகா! நீ முதலில் இவரையல்லவோ நமஸ்கரிக்கவேண்டும். அடாடா! உனக்கு எப்படித் தெரியும்? முருகா! இவர் யாரென்று உனக்குத் தெரியாதே?" என்று வினவினார். அக் கிழவன், ஆச்சர்யப்பட்டவனாய்,

"ஸ்வாமி! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. நான் ஏன் அவரை முதலில் நமஸ்கரிக்கவேண்டும்?" என்று வினவ, ஜகதீசய்யர், அவ் வாலிபனை வாஸ்தவத்தில் யாரென்பதையும் அவன் அவ்விதம் மாறு பெயருடன் வந்ததின் காரணத்தையும் சொல்லவே, அக் கிழவன், தியாகராஜனை ஒருதரம் உற்று நோக்கிவிட்டு, ஆவலுடன் ஓடிவந்து, மடேரென்று தரையில் விழுந்து, அவ் வாலிபனுடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு, சிறு குழந்தை

போல் விம்மி விம்மி அழுதவண்ணம், "எஜமானே! தெரியாமல் செய்துவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்." என்று கெஞ்சினான். இதைக் கேட்டதும், அவ் வாலிபன், வியப்புற்று, ஆவலுடன் அவனைத் தூக்கி நிறுத்தி பிரியத்துடன்,

"முருகா! நீ என்ன செய்தாய்? உன்னை நான் எதற்காக மன்னிக்கவேண்டும்?" என்று வினவ, அக் கிழவன்,

"ஸ்வாமி! அன்று இரவு நீங்கள் மாடிப் படியின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்தபொழுது உங்களைக் கல்லால் அடித்தது பரம சண்டாளனாகிய நானே." என்று தன் தேகம் குலுங்க மறுபடியும் அழவாரம்பித்தான். இதைக் கேட்டதும் தியாகராஜன், மேலும் வியப்புற்று,

"நீயா? நீ ஏன் என்னை அடிக்கவேண்டும்?" என்று வினவ, அக் கிழவன்,

"ஸ்வாமி! இந்த பங்களாவின் மாடியில் பல விலையுயர்ந்த வைர நகைகள் இருப்பது எனக்கு ஆதியிலிருந்தே தெரியும். பெரிய எஜமான் (வக்கீல் அனந்தராமய்யர்) அவைகளை ஒரு பீரோவில் வைத்ததை நானே பார்த்துக்கொண்டிருந்தேன். ஆகையால் நான் எவரையும் இவ் வீட்டிற்குள் விடுவதில்லை. அப்படியே விட்டபோதிலும் அவர்கள் மறுபடியும் வெளியே போகும்வரையில் நானும் அவர்களுடன் இருப்பது வழக்கம். ஆகவே, நீங்கள் இவ் வீட்டிற்கு வந்ததும், நீங்கள்மட்டும் தனிமையில் வந்திருப்பதை அறியவே, என் மனதில் சந்தேகம் தோன்றியது. இன்னும், நீங்கள் வந்த மறுதினம் மற்றொருவரை (சாரங்கபாணியை) அழைத்துக்கொண்டு மாடிக்குப் போனீர்கள். உடனே என் சந்தேகம் அதிகரித்தது. நீங்கள் அந் நகைகளைத் திருடும்பொருட்டே இந்த பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டீர்களென்று நினைத்தேன். ஆகையால், அது முதற்கொண்டு நான் உங்களைக் கவனிக்கலானேன். அன்று இரவு நீங்கள் மறுபடியும் மாடிக்குச் சென்றபொழுது

188789-1



நானும் மெல்ல மேலே வந்து ஒரு மறைவில் நின்றுகொண்டிருந்தேன். நீங்கள் அப் பூட்டைத் திறந்து பார்த்ததும், எனக்குண்டான கோபத்திற்கு அளவில்லை. ஆகையால், நீங்கள் மறுபடியும் கீழே இறங்கி, கடைசி மாடிப் படியின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்தபொழுது, கோப வெறியினால் என்ன செய்கிறோமென்பதையும் உணராமல் பக்கத்தில் கிடந்த ஒரு கல்லை எடுத்து ஓங்கி உங்கள்மேல் எறிந்தேன். ஆனால் நீங்கள் மூர்ச்சித்து விழுந்ததும், இறந்துவிட்டீர்களென்று பயந்து கொலைக் குற்றம் என்மேல் வராமலிருக்க, டாக்டர் வீட்டுக்கு ஓடிச் சென்று நீங்கள் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டதாகச் சொல்லிவிட்டேன். அன்று இரவு முழுமையும் நீங்கள் சீக்கிரம் இறந்துவிடுவீர்களென்று பயந்து நான் அனுபவித்த பீதியாலும் கவலையாலும் எனக்கு ஜ்வரம் வந்துவிட்டது. எஜமானே! தெரியாமல் செய்துவிட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்." என்று மறுபடியும் கெஞ்சினான்.

தியாகராஜன், பிரியத்துடன் அக் கிழவனுடைய கரங்களைப் பிடித்துக்கொண்டு, ஆவலுடன்,

"முருகா! நீ பயப்படவேண்டாம். ஆமாம்; இப்பொழுது அந் நகைகள் எங்கே?" என்று வினவ, அக் கிழவன்,

"இதோ என்னிடம் இருக்கின்றன. அதே இரவு நான் அவைகளை எடுத்துவந்து என்னிடம் வைத்துக்கொண்டுவிட்டேன். மாடிச் சாவி ஒன்று என்னிடமும் இருக்கிறது." என்று கூறியவண்ணம், ஒரு மூலையிலிருந்த ஒரு மரப்பெட்டியை நோக்கி ஓடினான்.

* *

அதே இரவு சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம் தியாகராஜனும் வக்கீல் ஜகதீசய்யரும் முருகவிலாஸின் முன்பக்கத்திலிருந்த தோட்டத்தில் கீழ்க்கண்டவாறு பேசிக்கொண்டிருந்தனர்.

188789



வக்கீல் :— தியாகராஜா! இந்நகைகளை நாம் இப்பொழுது என்ன செய்வது?

தியாகராஜன் :— செய்வதென்ன? என் தந்தை எழுதியிருக்கும் அதே இடத்தில் சிங்காரம் செட்டியார் இன்னும் இருக்கும்பக்ஷத்தில் அவரை நானே சென்று நேரில் பார்த்து இவைகளை அவரிடம் கொடுத்துவிடுகிறேன். அவர் ஒன்றும் வம்புசெய்யமாட்டாரென்பது நிச்சயம். அப்படியே அவர் இதற்குள் இறந்திருந்தால் அவருடைய வார்சிடம் கொடுத்துவிடுவோம். அப்படி வார்சுமில்லாவிட்டால், நாம் இவைகளை விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவோம்.

---

## அத்தியாயம் 16.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து கிட்டத்தட்ட ஒருவருஷ காலம் கழிந்துவிட்டது.

அச்சமயம் டாக்டர் குஞ்சிதபாதத்தின் தங்கை செல்லம்மாள் முருக விலாஸத்தின் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் சுமார் 16 வயதுள்ள ஒரு அழகிய பெண்மணி அவளை நோக்கி வரவே செல்லம்மாள், சந்தோஷத்துடன்,

“ விசாலாக்ஷி! வா, ஏன் இவ்வளவு நாழி? ” என்று வினவ, அவளுடைய அத்தையின் பெண்ணாகிய விசாலாக்ஷி,

“அதிருக்கட்டும். உன் ஆத்துக்காரர் எங்கே?” என்று கேட்டாள். செல்லம்மாள், சிறித்துக்கொண்டே,

“ அதோ பார். உன் அத்துக்காரருடன் பேசிக்கொண்டிருக்கிறார்.” என்று கூறியவண்ணம் கொஞ்சதூரத்தில் பேசிக்கொண்டிருந்த தியாகராஜனையும் டாக்டர் குஞ்சிதபாதத்தையும் காண்பித்தாள்.

சுபம் ! சுபம் !! சுபம் !!!

1932 25வது பதிப்பு. 1932

## ஸ்ரீவித்யா

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட், பிஸினஸ், பாப்புலர் & அபிஷியல்

## டைரிகள்

இந்த டைரிகள் உயர்ந்த வெண்மையான பேபரில் பிரிண்டு செய்து, மிகவும் நேர்த்தியான காலிகோவில் பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன. ஒருதரம் உபயோகித்தால் நன்கு விளங்கும்.

தென் இந்தியா முழுவதும் எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றது.

பப்ளிஷர்ஸ் :— ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம், (தென் இந்தியா).

# பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதல் உதவி.

நூலாசிரியர்—டாக்டர் யூ. ராம ராவ்.

நமது இந்துதேசத்தில் தாய்களின் மரண விகிதமும் சிசுக்களின் மரண விகிதமும் தற்போது அதிகமாகவிருக்கிறது ஒரு வயதுக்குட்பட்ட சிசுக்களில் 1000க்கு 260 பேர்கள் வருஷவாரி மாண்டுபோகிறார்கள் தாய்மார்கள் கர்ப்பிணிகளாக இருக்கும்போது ஆரோக்கிய விதிகளைக் கவனியாமல் தேகத்தை பலஹீனப்படுத்திக்கொள்வதும், பிரஸவகாலத்தில் டாக்டர், தேர்ச்சிபெற்ற மருத்துவ ஸ்திரீ இவர்கள் உதவி இல்லாமல், புராதன பழக்கத்தைக் கைப்பிடித்து ஒன்றும் தெரியாத மருத்துவகுல ஸ்திரீகளைக்கொண்டு மருத்துவம் செய்துகொள்வதும், சிசு பிறந்த பிறகு அதற்கு வேண்டிய போஷிப்பைச் சரிவர செய்யாமலிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. ஆனதுபற்றி இந்திய ஸ்திரீகளுக்கு பிரஸவத்தைக் குறித்து அற்ப ஞானமாகிலும் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது முதல் உதவிபுரியப் போதுமான அறிவு இல்லாமையால் அநேக கெடுதிகள் சம்பவிக்கின்றன பிரஸவ வேதனைப்படும்போது டாக்டர் அல்லது மருத்துவ ஸ்திரீ வரும்வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதை மட்டும் இச்சிறு நூல் கற்பிக்கிறது இதில் பதினான்கு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன கர்ப்பச் சின்னங்கள், கர்ப்பகாலத்தில் நேரிடும் விபத்துக்கள், சுகப்பிரசவம், கஷ்டப் பிரசவம், பிரசவத்தில் பரிசுத்தம், பிரசவகாலத்தில் நேரிடக்கூடிய சிக்கான வியாதிகள், குழந்தையின் பாதுகாப்பு, சிசுக்களின் போஷிப்பு இவை முதலியன யாவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள். இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் பரிபாஷைக் கலப்பின்றி எழுதப்பட்டிருக்கிறது

விலை அணா 6.

ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும் வி. பி. யில் அனுப்பவேண்டுமானால் ஆறு காப்பிக்கு குறையாமல் ஆர்டர் செய்யவேண்டும் வேண்டுவோர் சென்னை தம்புசெட்டித்தெரு 323 நெ. ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் விலாசம்—ஆரோக்கிய தீபிகை மானேஜர், தபால் பெட்டி 166, சென்னை என்று எழுதவும்

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.